Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

WEDNESDAY, NOVEMBER 30, 2022

புதன்கிழமை நவம்பர் 30,2022 | ஒளி: 08 கதிர் 154 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | FREE

# ‘கடன்பொறி’யை நிராகரித்தது சீனா



**அரசியல் நிபந்தனைகளுக்கு அமைய எந்தவித உதவிகளையும் செய்யவில்லை**

**பிரச்சினைகளை உரிய விதத்தில் தீர்ப்பது குறித்து உரிய நிதி அமைப்புகளுக்கு சீன ஒத்துழைப்புகளை வழங்குகின்றது.**

சீனா எப்போதும் இலங்கையின் அரசியல் நிபந்தனைகளுக்கு அமைய எந்தவித உதவிகளையும் செய்யவில்லை. அவ்வாறான நிலைப்பாட்டை சீனா ஒருபோதும் கொண்டிருக்காது என சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் ஜாவோ லிஜான் அந்நாட்டு செய்தியாளர் மாநாட்டில் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முதலீடுகளை முன்னெடுப்பது மற்றும் நிதி உதவிகளை செய்வது தொடர்பான விடயங்களில் நாங்கள் ஒருபோதும் அரசியல் சுயநலத்துடன் செயற்படவில்லை எனவும் அவர் தெரிவித்துள்ளார் .

கடன் நிதி உதவிகள் விடயத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சரின் கருத்தை வரவேற்கின்றோம், சீனாவின் உதவிகளை வரவேற்பதாகவும், நாம் இரு தரப்பும் நட்பு நாடுகள் என அவர் தெரிவித்துள்ள கருத்தானது ஆரோக்கியமானது என்றார்.

தொடர்ச்சி P2

# குஷானுக்கு விளக்கமறியல்



ஓமானில் உள்ள இலங்கை தூதரகத்தின் அதிகாரியாக பணியாற்றிய ஈ. குஷானை விளக்கமறியலில் வைக்க உத்தரவிடப்பட்டுள்ளது.

நேற்று (29) செவ்வாய்க்கிழமை காலை கைதுசெய்யப்பட்ட குறித்த நபரை எதிர்வரும் 13 ஆம் திகதி வரையில் விளக்கமறியலில் வைக்க கொழும்பு பிரதான நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

ஓமானின் மஸ்கட் நகரில் இருந்து நேற்று (29) அதிகாலை 3.57 மணியளவில் கட்டுநாயக்க விமான நிலையத்தை அவர் வந்தடைந்த நிலையில், குற்றப் புலனாய்வு திணைக்களத்தினரால் அவர் கைது செய்யப்பட்டார்.

தொடர்ச்சி P2

உயர்தர மாணவர்களின்

# ‘வரவில் சிக்கல்’

உயர்தர பரீட்சைக்கு தோற்றவுள்ள மாணவர்கள், பாடசாலை நாட்களில் 80 சதவீதமான வருகையை கட்டாயமாக்கும் தீர்மானத்தில் சிக்கல் ஏற்பட்டுள்ளதாக அமைச்சரவைப் பேச்சாளரும் வெகுஜன ஊடக அமைச்சருமான பந்துல குணவர்தன தெரிவித்தார்.

அரசாங்கத் தகவல் திணைக்களத்தில் நேற்று (29) நடைபெற்ற அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் வாராந்த ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின்

# முன்னாள் தலைவர், செயலாளர் வழக்கில் இருந்து விடுவிப்பு



யாழ்ப்பாணம் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னாள் தலைவர் மற்றும் செயலாளர் ஆகியோருக்கு எதிராக பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் கொழும்பு மேல் நீதிமன்றில் தொடரப்பட்ட வழக்கினை சட்டமா அதிபர் மீளப்பெற்றதையடுத்து அவர்கள் இருவரும் நேற்றைய தினம்(29) அவ்வழக்கில் இருந்து விடுவித்து விடுதலை செய்யப்பட்டனர்.

அவர்கள் சார்பில் ஜனாதிபதி சட்டத்தரணி எம். ஏ. சுமந்திரன், சட்டத்தரணிகள் கேசவன் சயந்தன், நிரான் அங்கிட்டல், திவ்யா மஸ்கரங்கே ஆகியோரோடு ஆஜராகி இருந்தார்.

தொடர்ச்சி P2

# பாதகமான உடன்படிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும்



நாட்டில் தற்போது நிலவும் பொருளாதார மந்த நிலையை நிவர்த்திக்க சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகளை மேற்கொள்வது, தற்போதைய கொள்கையாக இருக்க வேண்டுமென தெரிவித்த அமைச்சரும் அமைச்சரவைப் பேச்சாளருமான பந்துல குணவர்தன, இலங்கைக்கு பாதகமான சூழ்நிலைகளை உருவாக்கும் சுதந்திர வர்த்தக உடன்படிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும் என்றார்.

அரசாங்க தகவல் திணைக்களத்தில் நேற்று (29) நடைபெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் ஊடகவியலாளர் சந்திப்பில் ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் போதே, மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர், அந்நியச் செலாவணி நெருக்கடியைச் சமாளிக்க சுதந்திர வர்த்தக ஒப்பந்தங்கள் அவசியம் என்றும், உலகமயமாக்கலின் கீழ், உலகில் எந்த நாடும் தனியாக வளர்ச்சியடைய முடியாது.

தொடர்ச்சி P2

# ‘மாவீரர் தின வியாபாரிகள்’ தலைப்பில் சுவரொட்டிகள்

எஸ்.றொசேரியன் லெம்பேட்




மன்னார் மாவட்டத்தின் சில பகுதிகளில் ‘மாவீரர் தின வியாபாரிகள்’ என்ற தலைப்பில், சில பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களைக் குறிப்பிடப்பட்டு ஒட்டப்பட்டுள்ள சுவரொட்டிகள் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளன.

குறிப்பாக 2009 ஆம் ஆண்டுக்கு பின்னர் ஒவ்வொரு மாவீரர் தினமும் வியபாரமாக ஆக்கப்பட்டுள்ளதாகவும் மாவீரர்களை வைத்து வியாபாரம் இடம்பெறுவதாகவும் அதில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

# மண்ணெண்ணெய் வழங்க சீனத் தூதுவர் இணக்கம்



கடற்றொழில் மற்றும் விவசாய நடவடிக்கைகளுக்கு மண்ணெண்ணெயை அன்பளிப்பாக வழங்குவதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்று இலங்கைக்கான சீனத் தூதுவரினால் உறுதியளிக்கப்பட்டுள்ளது.

குறித்த தொழில் நடவடிக்கைகளுக்கு கணிசமானளவு மண்ணெண்ணெய் தேவைப்படுகின்றமையினால், மண்ணெண்ணெயை அன்பளிப்பாக வழங்குவதற்கும் சீனா முன்வர வேண்டும் என்று அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

தொடர்ச்சி P2

அரசியலமைப்பை வடக்கு ஆளுநர் மீறியுள்ளார்

# ஜனாதிபதி, பிரதமருக்கு சி.வீ. கே.சிவஞானம் கடிதம்

எம்.றொசாந்த்



வடக்கு மாகாண ஆளுநரின் நியதிச்சட்ட உருவாக்கம் தொடர்பில், திட்டமிட்டே இந்த நாட்டின் அரசியலமைப்பை மீறியுள்ளார் என்பது தெளிவு என்பதால் இதற்கெதிராக பொருத்தமான, காத்திரமான நடவடிக்கை எடுக்குமாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வடக்கு மாகாண அவைத் தலைவர் சி.வீ. கே.சிவஞானம் கடிதம் மூலம் கோரிக்கை விடுத்துள்ளார்.

மேலும், பிரதமர் தினேஷ் குணவர்தன மற்றும் மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி இராஜாங்க அமைச்சர் ஜானக வக்கும்புர ஆகியோருக்கும் அவர் கடிதம் அனுப்பி வைத்துள்ளார்.

தொடர்ச்சி P2

# ‘Mein Schiff 5’ கப்பல் இன்றிரவு புறப்படும்



உலகின் அதி சொகுசு வாய்ந்த கப்பலான *‘Mein Schiff 5’* கப்பல் நேற்று (29) அதிகாலை கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்தது.

2030 பயணிகள் மற்றும் 922 பணியாளர்களுடன் *‘Mein Schiff 5’* கப்பல் நாட்டை வந்தடைந்துள்ளது.

அத்துடன் இந்த கப்பல் கொழும்பு துறைமுகத்திலிருந்து நேற்று (29) இரவே புறப்பட்டு ஹம்பாந்தோட்டை துறைமுகத்தை நோக்கி பயணித்தது.

நாட்டிலிருந்து இன்று (30 ) இரவு 09 மணிக்கு புறப்படவுள்ளதாக ஹார்பர் மாஸ்டர் நிர்மால் சில்வா குறிப்பிட்டார். குறித்த கப்பலில் நாட்டை வந்தடைந்த சுற்றுலாப் பயணிகளில் பெரும்பாலானோர் ஐரோப்பியாவை சேர்ந்தவர்கள் என தெரிவிக்கப்படுகின்றது.

# மருத்துவ பதிவுகளை இரத்து செய்வோம்

பா.நிரோஸ்



முறையான அனுமதிகளை பெறாது வெளிநாடுகளுக்கு சென்றுள்ள வைத்தியர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்த சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல, அவ்வாறு வெளிநாடுகளுக்கு செல்லும் வைத்தியர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு, அவர்களின் மருத்துவ பதிவுகளை இரத்து செய்வோம் எனவும் எச்சரித்தார்.

முறையான ஒழுங்குவிதிகளைப் பின்பற்றாது வெளிநாடுகளுக்கு செல்லும் வைத்தியர்களின் மருத்துவ சபையின் பதிவுகளை நீக்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என தெரிவித்த சுகாதாரத்துறை அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல, வைத்தியர்கள் வெளிநாடுகளுக்கு செல்வது தொடர்பில் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும் என்றார்.

தொடர்ச்சி P2

# Mobile Body Massageக்குள் சென்றவருக்கு நேர்ந்த கதி



*Mobile Body Massage* சேவை வழங்குவதாக பேஸ்புக்கில் விளம்பரம் ஒன்றை பார்த்து விட்டு, அங்கு சென்ற இளைஞன் ஒருவன் தாக்கப்பட்டு அவரது உடைமைகள் களவாடப்பட்டுள்ள சம்பவம் களுத்துறையில் இடம்பெற்றுள்ளது.

குறித்த விளம்பரத்தை பார்த்துவிட்டு, *Mobile Body Massage* சேவையை பெற்றுக்கொள்ள கடற்கரைக்கு சென்ற இளைஞன் தாக்கப்பட்டு அவரது, கையடக்கத் தொலைபேசி, மோட்டார் சைக்கிள் மற்றும் பணத்தை திருடிய இருவர் கைது செய்யப்பட்டுள்ளதாக களுத்துறை வடக்கு பொலிஸார் தெரிவித்தனர்.

இதில், களுத்துறை வடக்கு மற்றும் வஸ்கடுவ பிரதேசங்களைச் சேர்ந்த 27 மற்றும் 28 வயதுடைய இருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

தொடர்ச்சி P2

# 21/4 தாக்குதல் பெண்ணுக்கு பிணை

கனகராசா சரவணன்

உயிர்த்த ஞாயிறுத் தாக்குதல் தொடர்பாக காத்தான்குடி பிரதேசத்தில் கைது செய்யப்பட்ட சஹ்ரானின் பயிற்சி முகாமில் பயிற்சிபெற்ற மற்றும் அவருடன் தொடர்பை பேணி வந்தார் என்றக் குற்றச்சாட்டின் கீழ், சந்தேகத்தின் பேரில் கைது செய்யப்பட்டு விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த பெண்ணொருவர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இந்த குற்றச்சாட்டுகளின் கீழ் கைது செய்யப்பட்ட ஏனைய 11 பேரையும் எதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறும் மட்டக்களப்பு நீதவான் நீதிமன்ற நீதவான் பீற்றர் போல், நேற்று (29) திகதி செவ்வாய்க்கிழமை உத்தரவிட்டார்.

21.4.2019 உயிர்த்த ஞாயிறன்று இடம் பெற்ற தாக்குதலின் பின்னர் சஹ்ரான் குழுவோடு தொடர்புடையவர்கள் என்றும் இவர்கள் ஹம்பாந்தோட்டை மற்றும் நுவரெலியா போன்ற இடங்களுக்கு பயிற்சிக்காக சென்றார்கள் என்ற சந்தேகத்தின் பேரில் காத்தான்குடியை சேர்ந்தவர்கள்,

தொடர்ச்சி P2

# இந்திய மீனவர்களுக்கு 12 வரை விளக்கமறியல்

செந்தூரன் பிரதீபன்



இலங்கை கடற்பரப்புக்குள் அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தனர் என்றக் குற்றச்சாட்டின் பேரில் கைது செய்யப்பட்ட இந்திய மீனவர்களை, டிசெம்பர் 12ஆம் திகதி வரையிலும் விளக்க மறியலில் வைக்குமாறு ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்ற பதில் நீதவான் சரோஜினி இளங்கோவன், செவ்வாய்க்கிழமை (29) உத்தரவிட்டார்.

காரைநகர் கடற்பரப்புக்குள் திங்கட்கிழமை (28) அத்துமீறி நுழைந்து மீன்பிடித்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ், ஐந்து படகுகளுடன் இந்திய மீனவர்கள் 24 பேர் கைது செய்யப்பட்டிருந்தனர்.

அந்த மீனவர்களை யாழ். மாவட்ட கடல் தொழில் நீரியல் வளத் திணைக்கள அதிகாரிகள் பொறுப்பெடுத்து ஊர்காவற்றுறை நீதவான் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தியிருந்தனர். அதன்போதே மேற்கண்ட உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

PAGE 1 தொடர்ச்சிகள்

# ‘கடன்பொறி’யை நிராகரித்தது சீனா



குறிப்பாக இலங்கையில் சீனாவின் கடன்பொறி என பயன்படுத்தப்படும் சொல்லாடலை வலுவாக நிராகரிக்கும் கருத்து இதுவாகும். அதுமட்டுமல்ல சீனா எப்போதும் இலங்கையின் அரசியல் நிபந்தனைகளுக்கு அமைய எந்தவித உதவிகளையும் செய்யவில்லை. அவ்வாறான நிலைப்பாட்டை சீனா கொண்டிருக்காது என்றார்.

இலங்கையில் முதலீடுகளை முன்னெடுப்பது மற்றும் நிதி உதவிகளை செய்வது தொடர்பான விடயங்களில் நாங்கள் ஒருபோதும் அரசியல் சுயநலத்துடன் செயற்படவில்லை. தற்போது இலங்கை பல்வேறு நெருக்கடிகளுக்கு முகங்கொடுத்து வருகின்றது. இலங்கை எதிர்கொண்டுள்ள நெருக்கடிகள் மற்றும் சவால்களை சீனா முழுமையாக புரிந்துகொண்டுள்ளது. இந்த பிரச்சினைகளை உரிய விதத்தில் தீர்ப்பது குறித்து உரிய நிதி அமைப்புகளிற்கு சீன ஒத்துழைப்புகளை வழங்குகின்றது. அத்துடன் உறுதியான தீர்வை பெற்றுக்கொடுக்க நானும் பணியாற்றுகின்றோம்.

மேலும் எங்கள் சக்திக்கு உட்பட்ட வகையில் நாங்கள் இலங்கையின் சமூக பொருளாதார அபிவிருத்திக்கு உதவி வழங்கி வந்துள்ளோம். சீனா தொடர்ந்தும் இலங்கையுடன் நெருக்கமான நட்புறவை கையாண்டு ஒத்துழைப்புக்களை வழங்கும் என்றார்.

## குஷானுக்கு விளக்கமறியல்

ஓமானுக்கு வேலைக்குச் சென்ற பெண்களுக்கு பாலியல் துன்புறுத்தல் கொடுத்தமை மற்றும் ஆட்கடத்தல் உட்பட பல குற்றச்சாட்டுகள் தொடர்பில் அவர் மீது குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.

## ‘வரவில் சிக்கல்’

தொடர்ந்து தெரிவித்த அவர், கடந்த காலங்களில் நாட்டில் முன்னெடுக்கப்பட்ட போராட்டங்கள், ஆர்ப்பாட்டங்கள், எரிபொருள் பிரச்சினைகள், கொவிட் தொற்று போன்ற பல்வேறு காரணங்களால் பாடசாலைக்கு வர முடியாமல் சிரமப்பட்ட மாணவர்களுக்காக நிவாரணத் திட்டம் ஒன்றை உருவாக்க வேண்டுமென கல்வி அமைச்சரிடம் முன்மொழிய நடவடிக்கை எடுத்து வருவதாகவும் அமைச்சர் குறிப்பிட்டதுடன், அது தொடர்பில் கல்வி அமைச்சர் சாதகமான பதிலை வழங்குவார் என்றும் பந்துல குணவர்தன தெரிவித்தார்.

உயர்தர மாணவர்களின் 80 சதவீத வருகைப்பதிவானது, மாணவர்கள் தமது கற்றல் விடயதானங்களை பூரணமாக்க வேண்டும் என்ற காரணத்துக்காகவே மாணவர்களின் வரவு 80 சதவீதமானதாக இருக்க வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளதாகவும் இதனால் எந்தவொரு பிரிவினருக்கும் அநீதி இழைக்கப்படுமா என்பது தொடர்பில் ஆராய்வதற்கு கல்வி அமைச்சரின் கவனத்துக்கு கொண்டு செல்வதாகவும் தெரிவித்தார்.

## பாதகமான உடன்படிக்கைகள் தவிர்க்கப்பட வேண்டும்

ஒவ்வொரு நாடும் மற்ற நாடுகளுடன் ஒப்பந்தங்களைச் செய்ய வேண்டும் என்றும் கூறினார். இவ்வாறான உடன்படிக்கைகளை மேற்கொள்வதில் தேவையான முன்நிபந்தனைகளுடன் இந்த ஒப்பந்தங்கள் கைச்சாத்திடப்பட வேண்டும் என்றார்.

## ‘மாவீரர் தின வியாபாரிகள்’ தலைப்பில் சுவரொட்டிகள்




அதற்கு உதாரணமாக சிறிதரன் எம்.பி, மாவீரர் தினத்துக்கு என்று ஐரோப்பிய நாடுகளுக்கு சென்று பணம் வசூலிப்பதாகவும் லண்டன் தமிழர் ஒருங்கிணைப்பு குழுவினால் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் எம்.பிக்கு சில கோடிகளை அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாகவும் சுவரொட்டியில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

அதில் சிறிது அளவு பணத்தை மாவீரர் தினத்துக்கு செலவழித்துவிட்டு மிகுதியை தங்கள் சொந்த செலவுகளுக்கு பயன்படுத்துவதாகவும் மாவீரர் தினத்தை பயன்படுத்தி ஒவ்வொரு முறையும் வியாபாரம் செய்வதாகவும் அந்த சுவரொட்டியில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## முன்னாள் தலைவர், செயலாளர் வழக்கில் இருந்து விடுவிப்பு

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளாகத்தில் கடந்த 2019ஆம் ஆண்டு மே மாதம் 04ஆம் திகதி இராணுவத்தினர், பொலிஸ் விசேட அதிரடிப்படையினர் மற்றும் பொலிஸாரால் முற்றுகையிடப்பட்டு நடாத்தப்பட்ட தேடுதல் நடவடிக்கையின் போது, பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் அறையிலிருந்து தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன், மாவீரர்களின் ஒளிப்படங்கள் மற்றும் தமிழீழ வரைபடம் என்பன கைப்பற்றப்பட்டன.

அதனையடுத்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் தலைவர் எம்.திவாகரன், செயலாளர் எஸ். கபில்ராஜ் ஆகிய இருவரும் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டனர்.

அதனை அடுத்து அவர்களுக்கு எதிராக பயங்கரவாத தடை சட்டத்தின் கீழ் வழக்கு தொடரப்பட்டு, யாழ்.நீதவான் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டனர். தொடர்ந்து நடைபெற்ற வழக்கு தவணைகளின் விசாரணைகளின் பின்னர் அவர்கள் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், அவர்களுக்கு எதிராக கொழும்பு மேல் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது. அந்நிலையில் குறித்த வழக்கினை சட்டமா அதிபர் கைவாங்கியதை அடுத்து அவர்கள் இருவரும் நேற்று (29) செவ்வாய்க்கிழமை வழக்கில் இருந்து விடுவித்து விடுதலை செய்யப்பட்டனர்.

## ஜனாதிபதி, பிரதமருக்கு சி.வீ. கே.சிவஞானம் கடிதம்



குறித்த கடிதத்தில் குறிப்பிடப்பட்டிருந்ததாவது,

வடக்கு மாகாண ஆளுநர் வடக்கு மாகாண சபையின் நியதிச் சட்டங்கள் எனக் கூறப்படும் பின்வரும் அறிவித்தல்களை 2303/29 இலக்கம் கொண்ட 27.10.2022 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தகமானியில் பிரசுரித்துள்ளார் என்பதை தங்களது கவனத்திற்கு கொண்டு வர விரும்புகின்றேன்.

2022 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க வாழ்வாதார முகாமைத்துவ சேவைகள் நியதிச் சட்டம் மற்றும் 2022 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க சுற்றுலாப் பயணிகள் நியதிச் சட்டம் ஆகியனவாகும்.

இந்த ஆவணங்களில் தாம் அரசியலமைப்பின் உறுப்புரிமை 254 C இன் கீழான ஏற்பாடுகளின் படியும் உறுப்புரிமை 254 T இன் கீழ் 24.03.1990 ஆம் திகதி ஜனாதிபதியினால் வெளியிடப்பட்ட பிரகடனத்தின் கீழான ஏற்பாடுகளின் படியும் செயற்படுத்துவதாகக் கூறியுள்ளார்.

இந்த ஆவணங்களின் அமைப்பு முறை மற்றும் சொற்பிரயோகங்களின் மீது விமர்சிப்பதை நான் தவிர்க்க விரும்புகின்றேன்.

எனினும், ஆளுநரின் நிறைவேற்று அதிகாரம் தொடர்பாக குறிபிடும் அரசியலமைப்பின் 254 C உறுப்புரிமையின் கீழ் சட்டவாக்க அதிகாரத்தை தாம் பிரயோகிப்பதாக கூறுவது மிகவும் குழப்பகரமாகக் காணப்படுகின்றது.

உண்மையில் இந்த உறுப்புரிமை மாகாண சபைகளின் நியதிச் சட்டவாக்க அதிகாரம் பற்றியும் குறிப்பிடுகின்றது. நிறைவேற்று அதிகாரம் மற்றும் நியதிச் சட்ட உருவாக்கம் ஆகியவற்றுக்கிடையேயான வேறுபாடு மிகவும் வெளிப்படையானது.

எனவே இந்த உறுப்புரிமையின் கீழ் இவர் நியதிச் சட்டங்களை இயற்ற முடியாது. நிலைமாறு கால ஒழுங்குகள் பற்றிய அரசியலமைப்பின் உறுப்புரிமை 254 T இன் கீழான ஜனாதிபதியின் பிரகடனத்தை இவர் கவசமாக முன் வைக்கின்றார். இவையும் நியதிச் சட்டத்தை உருவாக்கும் அதிகாரத்தை ஆளுநருக்கு வழங்கவில்லை.

இதுபோன்ற சட்டவாக்கம் அல்லது சட்டம் இயற்றல் அதிகாரம் உலகில் வேறு எங்கிலும் தனிநபர் ஒருவருக்கு வழங்கப்பட்டோ, பிரயோகிக்கப்படவோ இல்லை.

> **வடக்கு மாகாண ஆளுநர் இந்த விடயத்தில் திட்டமிட்டே இந்த நாட்டின் அரசியலமைப்பை மீறியுள்ளார் என்பது தெளிவு என்பதால் இதற்கெதிராக பொருத்தமான, காத்திரமான நடவடிக்கை வேண்டப்படுகின்றது**

மற்றவர்களுக்குத் தெரியாமல் இரகசியமான முறையில் ஆளுநர் மேற்கொண்ட இந்த நடவடிக்கை ஜனநாயகத்தினதும் ஜனநாயக ஆட்சி முறையினதும் ஜனநாயகக் கட்டமைப்புகளினதும் மக்களின் ஜனநாயக உரிமைகளினதும் அடிப்படை அத்திவாரத்தையே தகர்ப்பனவாகும்.

ஆளுநரின் தற்றுணிவு அதிகாரம் அரசியலமைப்பின் உறுப்புரிமை 254 F (2) படி ஜனாதிபதியின் பணிப்பின் கீழானதாக வேண்டும் என்பதும் ஆளுநரின் நிறைவேற்று அதிகாரம் 1987 ஆம் ஆண்டின் 42 ஆம் இலக்க மாகாண சபைகள் சட்டத்தில் 15 (2) ஆம் பிரிவின்படி ஜனாதிபதியின் பெயரில் என கூறப்பட வேண்டும் என்பதும் இங்கே குறிப்பிடப்பட வேண்டியது மிகப் பொருத்தமானதாகும்.

எனவே வடக்கு மாகாண ஆளுநர் இந்த விடயத்தில் திட்டமிட்டே இந்த நாட்டின் அரசியலமைப்பை மீறியுள்ளார் என்பது தெளிவு என்பதால் இதற்கெதிராக பொருத்தமான, காத்திரமான நடவடிக்கை வேண்டப்படுகின்றது என கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

## Mobile Body Massageக்குள் சென்றவருக்கு நேர்ந்த கதி



சந்தேகநபர்கள் முகநூல் பக்கத்தில் பெண்களைப் போன்று வேடமணிந்து “Mobile Body Massage” செய்வதாக விளம்பரம் செய்துள்ளனர். தங்களுடன் தொடர்பு கொள்பவர்களை நாகசந்தியா கடற்கரைக்கு வரவழைத்துள்ளனர்.

சம்பவத்தை அடுத்து, வஸ்கடுவ வாடியமன்கட பிரதேசத்தில் வைத்து சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும், திருடப்பட்ட மோட்டார் சைக்கிள் மற்றும் கைத்தொலைபேசி என்பன மீட்கப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேகநபர்கள் களுத்துறை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்படவுள்ளனர்.

## 21/4 தாக்குதல் பெண்ணுக்கு பிணை

சஹ்ரானின் சகோதரி மற்றும் அவரின் கணவர் உட்பட 66 பேரை கைது செய்தனர்.

இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக காத்தான்குடி பொலிஸார் வழக்கு தாக்குல் மேற்கொண்டனர். இவர்கள் அனைவரும் தொடர்ந்து விளக்கமறியலில் வைக்கப்பட்னர். இதில் வழக்கில் இருந்து 3 பேரை விடுவித்ததுடன் 63 பேரில் 51 பேர் பிணையில் வெளிவந்துள்ளதுடன் தொடர்ந்து 11 பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்

இந்நிலையில், மட்டக்களப்பு நீதவான் நீதிமன்றத்தில் இந்த வழக்கு நேற்று (29) விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது சிறைச்சாலையில் இருந்து பெண்ணொருவர் மட்டு அழைத்துவரப்பட்ட நிலையில் அவரை சட்டமா அதிபரின் ஆலோசனைக்கமைய பிணையில் விடுவித்ததுடன் ஏனைய 11 பேரையும் ஏதிர்வரும் 13 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார்.

## மருத்துவ பதிவுகளை இரத்து செய்வோம்



சுகாதார அமைச்சு, பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் சுற்றுநிருபங்களின்படி அரச வைத்தியர்கள் வெளிநாடுகளுக்கு செல்ல முடியும். எனினும், இதற்கு பின்பற்ற வேண்டிய நடைமுறைகள் இருக்கின்றன. வைத்திய அதிகாரிகள் நாடளாவிய ரீதியிலான சேவையின் நிறைவேற்றுப் பணியாளர் தரத்தைச் சேர்ந்தவர்கள் என்பதால், அவர்கள் பிரதமரின் அனுமதியுடன் வெளிநாடு செல்ல வேண்டும் என்றார்.

அவ்வாறில்லை என்றால் அது சட்ட விரோதமானது. இவ்வாறு வெளிநாடுகளுக்கு செல்பவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்பட்டு சேவையிலிருந்து அவர்களை நீக்குவதோடு, அவர்களின் வைத்திய பதிவுகளையும் இரத்து செய்ய முடியும். அதற்கான வாய்ப்புகள் உள்ளன என்றார்.

சுகாதார அமைச்சின் அனுமதியில்லாது வைத்தியர்களுக்கு வீசா வழங்கக்கூடாதென தூதரகங்களுக்கு அறிவிப்பதற்கும், வெளிநாடுகளுக்கு செல்லும் வைத்தியர்கள் விடுமுறை அனுமதியை வைத்திருக்கிறார்களா என குடிவரவு குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் சோதனையிடுவதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றார்.

> **நிறைவேற்றுப் பணியாளர் தரத்தைச் சேர்ந்தவர்கள் பிரதமரின் அனுமதியுடன் வெளிநாடு செல்ல வேண்டும்**

## மண்ணெண்ணெய் வழங்க சீனத் தூதுவர் இணக்கம்

சீனாவினால் வழங்கப்பட்ட, அண்ணளவாக சுமார் 90 இலட்சம் லீட்டர் டீசலை சம்பிரதாயபூர்வமாக பெற்றுக்கொண்ட நிலையில், கடற்றொழில் அமைச்சரினால் முன்வைக்கப்பட்ட இக்கோரிக்கையை சாதகமாகப் பரிசீலிப்பதற்கு இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் சென் ஹாங் உறுதியளித்துள்ளதாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவினால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு துறைமுகத்தில் டீசலை சம்பிரதாயபூர்வமாக பெற்றுக்கொள்ளும் நிகழ்வு கடந்த 27ஆம் திகதி நடைபெற்றது. அதில் கலந்து கொண்ட அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா மேலும் தெரிவிக்கையில்,

"சீன அரசாங்கம் தற்போது 90 இலட்சம் லீற்றர் டீசலை வழங்கியுள்ளமை எமது மக்களுக்கு பேருதவியாக அமைந்துள்ளது. சீனா வழங்கியுள்ள இந்த உதவிக்காக சீன அரசாங்கத்திற்கும் சீன மக்களுக்கும் இலங்கை அரசாங்கம் மற்றும் மக்கள் சார்பில் தமது நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றேன். தற்போது கிடைத்துள்ள 90 இலட்சம் லீற்றர் டீசலில் ஒரு பகுதியை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திடம் வழங்கி அவர்களிடம் இருந்து மண்ணெண்ணெயைப் பெற்று மண்ணெண்ணெயைப் பயன்படுத்தும் கடற்றொழிலாளர்களுக்கும் விவசாயிகளுக்கும் பகிர்ந்தளிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன" என்றார்.



பா. நிரோஸ்
ddnirosh@gmail.com

பல்கலைக்கழகங்களில் பயிலும்


# பிக்கு மாணவர்கள் தொடர்பாக கடுமையான சட்ட நடவடிக்கை

பல்கலைக்கழகங்களில் பயிலும் பிக்கு மாணவர்கள் தொடர்பாக கடுமையான சட்டத்தை செயற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

புத்த சாசனத்தில் பிரச்சினைகள் பல உள்ளன. துறவரத்தை பேணும் அனைவரும் தருமத்தின் அடிப்படையில் செயற்பட வேண்டும். தேரர்கள் அதனை பின்பற்றாவிட்டால் பிரச்சினைகள் பல ஏற்படும். புத்த பெருமானின் காலத்தில் இருந்து இது நடக்கின்றது. அங்குலிமாலன் என்பவர் காவி உடையை அணிந்தகொண்டே புத்த பெருமானுக்கு எதிராக நடந்துகொண்டார். இவ்வாறான நிலைமையில் தேரர்களுக்கு இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் வகையில்

அறநிலையங்கள் கட்டளைச் சட்டம் மற்றும் பிக்குமார் கதிகாவத் (பதிவு செய்தல்) ஆகியவற்றில் திருத்தங்களை மேற்கொள்வதற்கான சட்ட வரைபு செய்யப்பட்டுள்ளது. முன்னைய காலங்களில் அரசர்களே அதனை கட்டுப்படுத்தினர். பராக்கிரமபாகு காலத்தில் சில தேரர்களுக்கு மரண தண்டனையும் விதித்துள்ளார். அவ்வாறு எங்களுக்கு செய்ய முடியாது. அதற்கான அதிகாரமும் கிடையாது. ஆனால் இப்போது மகாநாயக்க தேரர்கள் இப்போது கட்டுப்பாட்டு நடவடிக்கைகளை பொறுப்பேற்று செயற்படுத்துகின்றனர். பௌத்த நிகாயக்கள் இது தொடர்பில் செயற்படுகின்றன.

இந்நிலையில் இந்த விடயம் தொடர்பில் நாங்களும் அவதானம் செலுத்த வேண்டும். குறிப்பாக பல்கலைக்கழகங்களில் கற்கும் பிக்குகள் தொடர்பிலேயே நாங்கள் அவதானம் செலுத்தியுள்ளோம். அவ்வாறான பிக்கு ஒருவர் மகாநாயக்க தேரரை தூற்றுகின்றார். இவர்கள் யார்? காவி உடையை அணிவதால் தருமத்திற்கு எதிராக செயற்பட விசேட பாதுகாப்பை பெற்றுக்கொள்ள முடியாது. இதனால் இந்த சட்டமூலம் அவசியமாகும் என்றார்.





## தட்டுப்பாட்டுக்கு காலதாமதமே காரணம்

நாட்டில் ஏற்பட்டுள்ள மருந்து பொருட்களின் பற்றாக்குறைக்கு நிதி நெருக்கடி காரணமல்ல என முன்னாள் சுகாதார அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான ராஜித சேனாரத்ன தெரிவித்தார். மருந்து பொருட்களை முன்பதிவு செய்வதில் ஏற்பட்ட காலதாமதத்தினால் இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட சிக்கல் நிலையே இதற்கு காரணமாகும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

நாட்டிற்கு உயிர் பாதுகாப்பு மருந்துகள் 14, அத்தியாவசிய மருந்துகள் 636, அத்தியாவசியமற்ற மருந்துகள் 400 என மொத்தமாக அரசாங்கத்திற்கு 1050 மருந்துகள் அவசியமாகும். எனினும் அத்தியாவசிய மருந்துகள் 636 இல் 185 மருந்துகள் நாட்டில் இல்லை. அத்தியாவசியமற்ற மருந்துகள் 400 இல் 190 மருந்துகள் இல்லை. உயிர்பாதுகாப்பு மருந்துகளில் டீ.என்.டீ முழுமையாக தீர்ந்துவிட்ட நிலை காணப்படுகின்றது. மாரடைப்பு நோயாளிகள் உயிரிழக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

அத்துடன் ஒரு மாதத்திற்கு போதுமான சேலைன் மாத்திரமே களஞ்சியத்தில் காணப்படுகின்ற நிலையில், மூன்று மாதத்திற்கு தேவையாக சேலைன் களஞ்சியத்தில் காணப்படுவது அவசியமாகும். புற்றுநோய்க்கான மருந்துகள் 40 இல் 15 மருந்துகள் இல்லை. புற்றுநோயற்ற மருந்துகள் 40 இல் 25 இல்லை இதற்கு காரணம் நிதி நெருக்கடியல்ல. மருந்துக்களை இறக்குமதி செய்வதில் ஏற்பட்ட காலதாமதமே இதற்கு காரணம் எனவும் அவர் தெரிவித்தார்.

## இந்து சமய வழிபாடுகள் தொடர்பில் ஆய்வு அவசியம்

இலங்கை, இந்தியாவில் உள்ள இந்து சமய வழிபாடுகளில் இரு நாடுகளுக்கிடையே வித்தியாசங்கள் காணப்படுகிறதா என்பது தொடர்பில் ஆய்வு செய்யப்பட வேண்டும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இலங்கையின் இந்து சமய வழிபாடுகள், இந்தியாவின் தமிழ்நாடு உள்ளிட்ட பல்வேறு மாநிலங்களில் முன்னெடுக்கப்படும் இந்து சமய வழிபாடுகளை விட வித்தியாசமானதா என்பதை ஆராய வேண்டும். நாட்டில் உள்ள பௌத்த விஹாரைகளிலும் இந்து தெய்வங்களின் வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. குறிப்பாக தெற்கில் உள்ள பௌத்த மக்கள் இந்து மத தெய்வங்களையும் வழிபடுகின்றனர். பௌத்த விகாரைகளில் சிவன், விஷ்ணு என இந்து மத தெய்வங்களின் வழிபாடுகளிலும் ஈடுபடுகின்றனர். எனவே, இந்த வரலாறுகள் ஆய்வுக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றார்.

## 153,375 கிலோகிராம் முழு ஆடை பால்மா

### சட்டவிரோதமான முறையில் கொண்டுவரப்பட்டுள்ளது



153,375 கிலோகிராம் முழு ஆடை பால் மாவைக் கொண்ட 6 கொள்கலன்கள் கொழும்பு துறைமுகத்திற்கு சட்டவிரோதமான முறையில் கொண்டு வரப்பட்டுள்ளதாக நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய தெரிவித்துள்ளார். கடந்த செப்டெம்பர் 15 ஆம் திகதி நியூலாந்திலிருந்து புறப்பட்ட இந்த கொள்கலன்கள் அடங்கிய கப்பல், மலேசியா வழியாக, ஒக்டோபர் 20 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை வந்தடைந்துள்ளது. இதில் சுமார் 153,575 கிலோகிராம் முழு ஆடைப்பால்மா அடங்கியுள்ளது.

கடந்த 4 ஆம் திகதி திறந்த கணக்கு அடிப்படையில் கொடுப்பனவுகளை செலுத்துவதாக ஆவணங்களில் குறிப்பிட்டு, சுங்கத்திலிருந்து குறித்த பால்மா தொகையை விடுவிக்க அதனை இறக்குமதி செய்த நிறுவனம் நடவடிக்கைகளை ஆரம்பித்தது. அதன்போது, குறித்த பால்மா கொள்கலன்கள், கப்பலில் ஏற்றப்பட்டு 35 நாட்களும், இலங்கைக்கு கொண்டு வரப்பட்டு 15 நாட்களும் கழிந்திருந்தன. வழக்கமாக, இறக்குமதி செய்யப்பட்ட பொருட்களை உரிய நிறுவனங்கள் 3 நாட்களுக்குள் சுங்கத்திலிருந்து விடுவித்துக்கொள்ளும், எனினும், குறித்த நிறுவனம் 15 நாட்களாகியும் அதற்கான நடவடிக்கையை எடுத்திருக்கவில்லை.

திறந்த கணக்கு அடிப்படையில் கீழ் பால்மா இறக்குமதிக்கு அனுமதி வழங்கப்பட்டிருந்ததுடன், வர்த்தக மற்றும் உணவு பாதுகாப்பு அமைச்சின் செயலாளரின் பரிந்துரைக்கமைய, ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டாளரின் அனுமதியின்றி பால்மா தொகையை சுங்கத்திலிருந்து விடுவித்துக்கொள்ளும் இயலுமை காணப்பட்டது என்றும் அவர் கூறினார்.

நாட்டின் பொருளாதார அபிவிருத்தியில்

## இந்நாட்டிற்கான ஒழுக்க விதிமுறைகள் அவசியம்

### சர்வமத பிரதிநிதிகள் தேசிய பேரவை உபகுழுவில் சுட்டிக்காட்டு



நாட்டின் பொருளாதாரத்தை அபிவிருத்தி செய்யும் அதேவேளை நாட்டில் பின்பற்றப்படும் ஒழுக்கத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வகையில் அவை மேற்கொள்ளப்பட வேண்டும் என சர்வமதத் தலைவர்கள் சுட்டிக்காட்டினர். நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்பட்ட பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழுவின் முன்மொழிவுகள் குறித்து விளக்கமளித்த போதே சர்வமதத் தலைவர்கள் இந்தக் கருத்தை முன்வைத்தனர்.

பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பிலான குறுகிய கால மற்றும் நடுத்தர கால நிகழ்ச்சித்திட்டங்களை அடையாளம் காணல் பற்றிய தேசிய பேரவையின் உப குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் பாட்டலி சம்பிக ரவணக்க தலைமையில் பாராளுமன்றத்தில் கூடியபோதே இவ்வாறு விளக்கம் அளிக்கப்பட்டது.

நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்தத் தேவையான கொள்கைகளை வகுப்பதற்கு, கடன் மறுசீரமைப்பு, உணவுப் பாதுகாப்பு, சுகாதாரத் தேவைகள், போக்குவரத்து திறன், எரிசக்தி போன்ற துறைகளில் காணப்படும் பிரச்சினைகள் குறித்து ஆராய்வதற்காக துறைசார்ந்த பிரதிநிதிகள் அழைக்கப்பட்டதாகக் குழுவின் தலைவர் சுட்டிக்காட்டினார்.இது குறித்து பாராளுமன்ற உறுப்பினர் சம்பிக ரணவக்க விளக்கமளித்தார். நாட்டின் பொருளாதார ஸ்திரத்தன்மை தொடர்பான குறுகிய கால தீர்வுகள் அடங்கிய இரண்டாவது அறிக்கையை முன்வைக்க தயாராக இருப்பதாகவும் தலைவர் தெரிவித்தார்.

நாட்டில் நிவாரணங்கள் பகிர்ந்தளிக்கப்படுவதில் ஏற்றத்தாழ்வுகள் காணப்படுவதாகச் சுட்டிக்காட்டிய அவர், உலக வங்கியின் கணக்கெடுப்புக்கு அமைய இந்நாட்டில் உயர்ந்த வருமானம் பெறும் 20% ஆனவர்களில் 12 % ஆனவர்கள் சமுர்த்தி உள்ளிட்ட அரசாங்கத்தின் நிவாரணங்களைப் பெற்றுக் கொள்வதாகவும், நாட்டில் குறைந்த வருமானம் பெறும் 20% ஆனவர்களில் 49 % ஆனவர்களுக்கு மாத்திரமே நிவாரணங்கள் கிடைப்பதாகவும் தெரிவித்தார்.

அதுமட்டுமின்றி, நாட்டின் பாதுகாப்புப் படையினருக்கு வரவு செலவுத் திட்டத்தில் பாரியளவிலான பணம் ஒதுக்கப்படவுள்ளதாகவும் சுட்டிக்காட்டிய அவர், இவ்விடயம் தொடர்பில் உரிய முறையில் ஆராய்ந்து வழிகாட்டல் ஒன்று முன்வைக்கப்படும் என நம்புவதாகவும் தெரிவித்தார்.

## விக்னேஸ்வரன் கூறுவது நியாயமா ?



65 வருடங்கள் சிங்களவர்களுடன் இருந்துவிட்டு வடக்கிற்கு சென்று சிங்களவர்களுக்கு அங்கு வசிக்க முடியாது என விக்னேஸ்வரன் கூறுவது எந்தவகையில் நியாயமானது என பொதுஜன பெரமுன பாராளுமன்ற உறுப்பினரான சரத் வீரசேகர கேள்வி எழுப்பினார்.

இலங்கையில் 72 சத வீத பௌத்தர்களும், 12 சத வீத இந்துக்களும், 9.7 சத வீத முஸ்லிம்களும், 6.3 கிறிஸ்தவர்களும் வசிக்கின்றனர். ஆயிரக் கணக்கான ஆண்டுகளுக்கு முன்பிருந்து எமது நாட்டில் தேரவாத பௌத்தம் இருந்ததுடன், எமது அரசியலமைப்பில் பௌத்த மதத்தை பாதுகாக்க வேண்டும் என்பது தொடர்பிலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

சிங்களவர்களுக்கு ஒரே நாடே இலங்கை. இதனாலேயே இலங்கையை 'சிங்களே' என்று முன்னைய காலத்தில் அழைத்துள்ளனர். இந்த நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்கும் பொறுப்பு சிங்களவர்களுடையது. நாட்டை எதிரிகள் கைபற்ற முயன்ற போது அவர்களை சிங்களவர்களே தோற்கடித்தனர். நாட்டை பாதுகாத்தாலே சிங்கள இனத்தை பாதுகாக்க முடியும். சிங்கள இனத்தை பாதுகாத்தாலே சாசனத்தை பாதுகாக்க முடியும். இதனால் சாசனத்தை பாதுகாக்க நாட்டின் ஒருமைப்பாட்டை பாதுகாக்க வேண்டும்.

பாராளுமன்றத்தில் விக்னேஸ்வரன், தமிழ் மக்களின் நிலம் என்று கூறுவதற்கான பொய்யான வரலாறுகளை காட்டுகின்றார். அவர் வடக்கு முதலமைச்சராக இருக்கும் போது சிங்களவர்களுக்கு வடக்கில் வசிக்க உரிமையில்லை என்று கூறியுள்ளார். அவர் கொழும்பு ரோயல் கல்லூரியில் சிங்களவர்களுடன் படித்து, சட்டக்கல்லூரியிலும் சிங்களவர்களுடன் கற்று 65 வருடங்கள் சிங்களவர்களுடன் இருந்துவிட்டு வடக்கிற்கு சென்று சிங்களவர்களுக்கு வடக்கில் வசிக்க முடியாது என்கிறார் என்று கூறியுள்ளார்.

கல்லுமுனை பிள்ளையார் ஆலயத்தின்

## கட்டட வேலைகள் தடுத்து நிறுத்தம்



வவுனியா சமனகுளம், கல்லுமுனை பிள்ளையார் ஆலயத்தின் கட்டட வேலைகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. இது தொடர்பில் தீர்வு ஒன்றை வழங்க வேண்டும் என ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் குலசிங்கம் திலீபன் சபையில் கோரிக்கை விடுத்தார்.

நிதி இல்லாது செய்யக்கூடிய வேலைகள் எமது பிரதேசத்தில் அதிகம் காணப்படுகின்றன. அனைவரும் ஒன்றிணைந்து எமக்கு வழங்கப்பட்ட கடமையை செய்தால் மாத்திரமே நாட்டைக் கட்டியெழுப்ப முடியும். வன்னியில் 90 சத வீதமான மக்கள் வறுமைக் கோட்டின் கீழ் உள்ளவர்களே. இவர்களுக்கு சுகாதார, வைத்திய சேவைகள் சிறந்த முறையில் கிடைப்பதில்லை. ஆரம்ப சுகாதார நிலையங்களுக்கு வைத்தியர்கள் செல்வதில்லை. அவ்வாறு செல்வதாக இருந்தாலும் சில மணித்தியாலங்களே அங்கு இருப்பார்கள் எனவும் தெரிவித்தார்.

மன்னார், வவுனியா மாவட்ட பிரதேச மக்கள் பல மைல் தூரங்களுக்குச் சென்றே வைத்திய தேவைகளை பூர்த்தி செய்ய வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது. வவுனியா மாவட்டத்துக்கென பிராந்திய சுகாதார அதிகாரி ஒருவர் இல்லை என்றார்

வடக்கு, கிழக்கு வளங்களை பயன்படுத்தினால்

# கையேந்த வேண்டிய அவசியமில்லை

## மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளர் என்.சிவலிங்கம்

ஏ.எச்.ஏ. ஹூஸைன்




வடக்கு கிழக்கு மாகாணங்களில், போதுமான வளங்கள் உள்ளதாகவும் அவற்றைச் சரியான முறையிலே பயன்படுத்தினால் மற்றவர்களிடம் கையேந்த வேண்டிய அவசியமில்லை என்றும் கிழக்கு மாகாண கூட்டுறவு அபிவிருத்தி ஆணையாளரும் சங்கங்களின் பதிவாளருமான பொறியியலாளர் என். சிவலிங்கம் தெரிவித்தார்.

ஏறாவூர் கூட்டுறவுச் சங்கப் பணியாளர்களுக்கு இலாபப் பங்கும் சீருடையும் வழங்கும் நிகழ்வு சங்கப் பணிப்பாளர் சபைத் தலைவர் எம்.எல். அப்துல்லத்தீப் தலைமையில் ஏறாவூர் கூட்டுறவுச் சங்க கூட்டுறவு வைத்தியசாலை கேட்போர் கூடத்தில் நேற்று (29) இடம்பெற்றபோதே அவர் இதனைத் தெரிவித்தார்.

அங்கு பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு தொடர்ந்து உரையாற்றிய அவர் “மாகாணத்தில் கூட்டுறவுச் சங்கம் நல்ல நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது. அதற்குக் காரணம் வடக்கு, கிழக்கில் ஏற்பட்ட அசாதாரண நிலையிலும் நாங்கள் எதற்கும் சளைத்தவர்களல்ல என்பதை நிரூபித்திருக்கின்றோம்.

பல இடர்களைச் சந்தித்த போதும் மிகக் குறுகிய காலத்திற்குள்ளேயே நாங்கள் மீள் எழுந்து கொண்டிருக்கின்றோம். அதன் காரணமாகவே ஏறாவூர் கூட்டுறவுச் சங்கம் மிகவும் உன்னதமான நிலையில் இயங்கிக் கொண்டிருக்கின்றது.

கூட்டுறவின் அச்சாணியாக இருந்து இங்கு பணியாற்றிக் கொண்டிருக்கின்ற பணியாளர்களும் அதன் பணிப்பாளர் சபைத் தலைவருமே அதற்குக் காரணம். கட்டுப்பாட்டோடு இருந்து பவணியாற்றுவதால் சாதனைகளை நிலைநாட்ட முடியும்.

சீன அரிசி வழங்கலில்; நாங்கள் பங்கெடுத்து கூட்டுறவுச் சங்கங்களின் பெயரைக் கெடுத்துக் கொள்ளவில்லை. அந்த அரிசி தரமற்றது என்ற விமர்சனம் பரவலாக இருந்தது.” என்றார்.

ஏறாவூர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம் மற்றும் ஏறாவூர் கூட்டுறவு வதை;தியசாலை உள்ளிட்ட இன்னும் பல அதன் கிளை நிறுவனங்களில் பணியாற்றும் 58 பணியாளர்களுக்கு சுமார் 3 இலட்சம் ரூபாய் இலாபப் பங்குப் பணம் பகிர்ந்தளிக்கப்பட்டதோடு சுமார் 3 இலட்சம் ரூபாய் பெறுமதியான சீருடைப் பொதிகளும் பகிர்ந்தளிக்கப்பட்டன.



# கசிப்பு ராணி கைது

கனகராசா சரவணன்

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புதூர் பிரதேசத்தில் கசிப்பு வியாபாரத்தில் ஈடுபட்டு பெண் ஒருவரை 20 போத்தல் கசிப்புடன் திங்கட்கிழமை (28) மாலை கைது செய்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

மாவட்ட புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த தகவல் ஒன்றின் அடிப்படையில் குறித்த வீட்டை முற்றுகையிட்ட பொலிஸார், அங்கு வியாபாரத்தில் ஈடுபட்ட பெண் ஒருவரை கைது செய்ததுடன் 20 போத்தல் கசிப்பை மீட்டனர்.

இதில் கைது செய்யப்பட்டவரை நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.



# சட்ட விரோதமாக ஆஸி. செல்லாதீர்

ஏ.எம்.கீத்,ஹஸ்பர்

சட்டவிரோதமான முறையில் அவுஸ்திரேலியாவுக்கு கடல் வழிப் பயணம் மூலமாக செல்வதை தடை செய்யவும் மக்கள் அதனை நம்பாது செயற்படுவது தொடர்பிலான விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையிலான கலந்துரையாடலொன்று திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் காரியாலயத்தில் நேற்று (29) இடம்பெற்றது.

அவுஸ்திரேலிய நாட்டுக்கான உயர்ஸ்தானிகர் மற்றும் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்க்கு இடையில் இடம் பெற்ற குறித்த சந்திப்பில் அவுஸ்திரேலியாவுக்கு கப்பல் மூலம் செல்வதனால் எந்த பலனும் இல்லை என்று தெரிவிக்கப்பட்டது.

இலட்சக்கணக்கான பணத்தை கொடுத்து ஏமாறாமல் சட்ட விரோதமான முறையில் செல்வதை நிறுத்திக் கொள்ள வேண்டும் எனவும் இதனை மக்கள் மத்தியில் விழிப்புணர்வு செய்வது தொடர்பாகவும் உயர்ஸ்தானிகர் தலைமையிலான குழுவினர் இதன் போது பொலிஸ் உயர் அதிகாரிகளிடத்தில் தெரிவித்துக் கொண்டார்.

குறித்த சந்திப்பில் அவுஸ்திரேலிய நாட்டின் பொலிஸ் உயர் அதிகாரி, ஊடக அதிகாரி உட்பட திருகோணமலை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் என பலர் கலந்து கொண்டனர்.

உலக அழகு ராணி போட்டிக்காக

# ஜப்பான் பறந்தார் இவன்ஜலின்

வீ.ரி. சகாதேவராஜா



எதிர்வரும் டிசெம்பர் மாதம் 13ஆம் திகதி ஜப்பானில் நடைபெற இருக்கும் ஜப்பான் டோக்கியோ சர்வதேச அழகு ராணி போட்டியில் கலந்து கொள்ள இலங்கையை பூர்வீகமாகக் கொண்ட இவன்ஜலின் பிரான்சியா லட்சுமணர் ஜப்பான் பயணமானார்.

லண்டனில் வசிக்கும் தற்போதைய ஐக்கிய இராச்சிய உலக அழகியும் இலட்சுமணர் சாந்தி தம்பதியரின் புதல்வியுமான இவன்ஜலின், அம்பாறை மாவட்டம் நாவிதன்வெளியை பூர்வீகமாக கொண்டவர்.

ஐக்கிய இராச்சியத்தில் உலக அழகு ராணியாக 2021 22 இல் தெரிவாகிய இவன்ஜலின் அதுக்கு முன்பு பெரிய பிரித்தானியாவில் உலக இளம் அழகியாக 2017 18 இல் தெரிவானவர்.

ஜப்பானில் நடைபெற இருக்கும் அறுபதாவது உலக அழகி போட்டியில் கலந்து கொள்ளவதற்கு கடந்த திங்களன்று (28) லண்டனில் இருந்து அவர் ஜப்பான் பயணமானார் .

பிரித்தானியாவில் பல தர்மஸ்தாபனங்களை நடத்தி வரும் இவர், அதனூடாக மட்டக்களப்பு பகுதிகளிலே வீடற்ற வர்களுக்கு வீடுகளை கட்டிக் கொடுத்ததோடு, காலி பகுதியில் பாடசாலை மாணவர்களுக்கு சீருடை வழங்கி வைத்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.




# அச்சுறுத்தலுக்கு எதிராக கவனஈர்ப்பு போராட்டம்

வா.கிருஸ்ணா

பொத்துவில் வைத்தியசாலை வைத்தியர்கள் அச்சுறுத்தப்படுவதற்கு எதிராகவும் வைத்தியசாலையில் வைத்தியர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு எதிர்ப்பு தெரிவித்தும் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு முன்பாக அமைதியான முறையில் நேற்று (29) கவன ஈர்ப்பு போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலை மற்றும் மட்டக்களப்பு மாவட்டத்தில் உள்ள வைத்தியர்கள் இணைந்து இந்த போராட்டத்தினை முன்னெடுத்தனர்.

“பொத்துவில் வைத்தியசாலையின் வைத்தியர்களின் உயிர் அச்சுறுத்தலுக்கு எதிராக நாம், நாங்கள் பொத்துவில் வைத்தியசாலையுடன்” போன்ற வாசகங்கள் பொறிக்கப்பட்ட பதாகைகளுடன் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பணி புறக்கணிப்பினால்

# வட மாகாணம் முழுவதும் போக்குவரத்து ஸ்தம்பிதம்

## பிற்பகலில் கைவிடப்பட்டது.

செந்தூரன் பிரதீபன், எஸ்.நிதர்ஷன், எம். றொசாந்த்



பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து இலங்கை போக்குவரத்து சபையின் யாழ். டிப்போ ஊழியர்களினால் முன்னெடுக்கப்பட்ட போராட்டத்துக்கு ஆதரவாக, வடக்கு மாகாணத்தில் உள்ள ஏழு டிப்போக்கள் ஒன்றிணைந்து நேற்றையதினம் (29) பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டன.

பின்னர், பொலிஸ் அதிகாரிகளின் வாக்குறுதிக்கமைய குறித்த போராட்டம் கைவிடப்படுவதாக இலங்கை போக்குவரத்து சபை தொழிற்சங்கங்கள் அறிவித்துள்ளன.

பணிப் புறக்கணிப்பு கைவிடப்பட்டுள்ளதுடன் நேற்று (29) பிற்பகல் இரண்டு மணியில் இருந்து போக்குவரத்து சேவைகள் ஆரம்பித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

கடந்த 26ஆம் திகதி யாழ். - பலாலி வீதியில் இடம்பெற்ற விபத்தில் சிறுவனொருவன் காயமடைந்ததையடுத்து, அந்த பஸ் சாரதி கூரிய ஆயுதத்தால் குத்தப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையின் அதி தீவிர சிகிச்சை பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

எனினும், இது குறித்து கைதான சந்தேகநபருக்கு மல்லாகம் நீதவான் நீதிமன்றம் பிணை வழங்கியதையடுத்து யாழ். டிப்போ ஊழியர்கள் நேற்று முன்தினம் (28) பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டனர்.

அதற்கு ஆதரவாக வடக்கில் உள்ள ஏழு இ.போ.ச டிப்போக்களின் ஊழியர்கள் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட்டமை குறிப்பிடத்தக்கது.



பாதுகாப்பு படையினர்

# இளைஞனை தாக்கியமை குறித்து விசாரணை

எம்.றொசாந்த், எஸ்.நிதர்ஷன்

பொலிஸார், இராணுவத்தினர் மற்றும் பொலிஸ் விசேட அதிரடி படையினர் இணைந்து யாழ். மானிப்பாயில் இளைஞன் ஒருவரை தாக்கிய சம்பவம் தொடர்பில் விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்தார்.

மானிப்பாய் ஆலடி சந்தியில் இராணுவத்தினர் மற்றும் பொலிஸார் கடமையில் இருந்த போது, தலைக்கவசம் அணியாது வந்தமை தொடர்பில் பொலிஸாருக்கும் இளைஞர் ஒருவருக்குமிடையில் வாய்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

அதனையடுத்து, இராணுவத்தினரும் பொலிஸாரும் இளைஞன் மீது சரமாரியாக தாக்குதலை மேற்கொண்ட போது, வீதியால் மோட்டார் சைக்கிளில் வந்த பொலிஸ் விசேட அதிரடி படையினரும் இணைந்து தாக்குதலை மேற்கொண்டுள்ளனர்.

தாக்குதல் சம்பவத்தினை அடுத்து அங்கு மக்கள் கூடியமையால் இளைஞனை கைது செய்த பொலிஸார், மானிப்பாய் பொலிஸ் நிலையத்திற்கு கொண்டு சென்று, இரத்த காயங்களுடன் நீண்ட நேரம் தடுத்து வைத்திருந்த பின்னர் யாழ்.போதனா வைத்திய சாலையில் இளைஞனை சிகிச்சைக்காக அனுமதித்துள்ளனர்.

இதனையடுத்து, தாக்குதலுக்கு இலக்கான இளைஞனிடம் நேற்று (29) வாக்கு மூலத்தை பதிவு செய்துள்ளத மனித உரிமைகள் ஆணைக்குழுவின் இணைப்பாளர், சட்ட வைத்திய அதிகாரியின் மருத்துவ அறிக்கையை பெற்றுக்கொண்டு மேலதிக நடவடிக்கைகளை முன்னெடுக்க உள்ளதாக தெரிவித்தார்.

# வவுனியா நகர சபைக்கு முதல் பெண் செயலாளர்

க.அகரன்



வவுனியா நகரசபையின் புதிய செயலாளராக திருமதி விமலவேணி நிசங்க, நேற்று (29) காலை அலுவலகத்தில் தமது கடமைகளை பொறுப்பேற்று கொண்டார்.

நகரசபையின் முதல் பெண் செயலாளராக கடமைகளை பொறுப்பேற்ற அவர், கிளி சென். தெரேசா மகளிர் மகாவித்தியாலயம் பழைய மாணவியும், பேராதனை பல்கலைக்கழக கலைமானி பட்டதாரியுமாவார் என்பது குறிப்பிடத்தக்கது.

# முல்லையில் நினைவேந்தல் ...

சண்முகம் தவசீலன்



முல்லைத்தீவு மாவட்டத்தின் ஆலங்குளம், அளம்பில், வன்னிவிளாங்குளம் மாவீரர் துயிலும் இல்லங்களில் உணர்வெளுச்சியுடன் மாவீரர் நாள் நினைவேந்தல் நிகழ்வுகள் இடம்பெற்றன

அதேவேளை, ஜயன்கன்குளம் பகுதியில் கடந்த 2007 ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 27 ஆம் திகதி இலங்கை இராணுவத்தின் ஆழ ஊடுருவும் படையினர், அம்பியூலன்ஸ் வண்டி மீது நடத்திய கிழைமோர் தாக்குதலில் உயிரிழந்த மாணவர்கள் உள்ளிட்ட 8 பேரின் 15 ஆம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு, ஞாயிற்றுக்கிழமை (27) இடம்பெற்றது

மேலும், ஒட்டுசுட்டானில் கடந்த 1990 ஆம் ஆண்டு நவம்பர் மாதம், 27ஆம் திகதியன்று இலங்கை இரணுவத்தினரின் விமானக் குண்டுத் தாக்குதலில் பலியான 12 பொது மக்களின் 32ஆம் ஆண்டு நினைவஞ்சலி நிகழ்வுகள் உணர்வெழுச்சியுடன் இடம்பெற்றமை குறிப்பிடத்தக்கது.





# வீதிகளை புனரமைக்குமாறு இரு இடங்களில் போராட்டம்

எம்.றொசாந்த்

யாழ்ப்பாணம் மானிப்பாய் ஊடான காரைநகர் வீதியை புனரமைக்குமாறு கோரி சங்கானை பஸ் நிலையத்துக்கு முன்பாகவும் வலிகாமம் மேற்கில் உள்ள வீதிகளை புனரமைக்குமாறு கோரிக்கை விடுத்து மூளாய் அரசடி சந்தியிலும் நேற்று (29) வீதி மறியல் மற்றும் கவனயீர்ப்பு போராட்டங்கள் முன்னெடுக்கப்பட்டன.

பல வருடங்களாக சங்கானை வீதி புனரமைக்கப்படவில்லை எனவும் மழை காலங்களில் வீதியால் போக்குவரத்து செய்ய முடியாத நிலைமை காணப்படுத்தாகவும் குறித்த வீதியை புனரமைத்து தருமாறு நீண்டகாலமாக கோரிக்கை விடுத்து வருவதாகவும் தெரிவித்து மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதேவேளை, நீண்ட காலமாக புனரமைக்கப்படாமல் உள்ள, யாழ்ப்பாணம் - மானிப்பாய் - காரைநகர் வீதி, மாவடி - மூளாய் வீதி, வட்டுக்கோட்டை -பொன்னாலை வீதி என்பவற்றை தற்காலிகமாகவேனும் புனரமைக்குமாறு கோரிக்கை விடுத்தே மூளாய் அரசடி சந்தியில் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

மழை காலங்களில் இந்த வீதிகளூடான போக்குவரத்து முற்றாக தடைப்படுகின்றது என தெரிவித்த அப்பகுதி மக்கள் அரசியல்வாதிகளும், அரச அதிகாரிகளும் இவ்விடயத்தில் தீவிர கரிசனை எடுக்கவில்லை என குற்றஞ்சாட்டியுள்ளனர்.

போராட்டத்தின் முடிவில் வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மாவட்ட செயலாளர் ஆகியோருக்கு முகவரியிடப்பட்ட கடிதங்கள் வலி.மேற்கு பிரதேச செயலாளரிடம் கையளிக்கப்பட்டதுடன், கடிதத்தின் பிரதி வீதி அபிவிருத்தி அதிகார சபைக்கும் அனுப்பிவைக்கப்பட்டது.

மலையக இந்தியவம்சாவழி தொழிலாளர்களும் தீர்வு திட்டத்தில் உள்வாங்கப்பட்டால்

# நாம் ஆதரவு

■ எஸ். கே. குமார்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க சிறுபான்மை மக்களின் இனப் பிரச்சினைகளை தீர்ப்பதற்காக கொண்டுவரவிருக்கும் தீர்வு திட்டத்தில் மலையக இந்தியாவம்சாவழி பெருந்தோட்ட தொழிலாளர்களையும் உள்வாங்க வேண்டும் என தெரிவித்துள்ள பாராளுமன்ற உறுப்பினருமான வே. இராதாகிருஷ்ணன் அப்படியான ஒரு தீர்வுத்திட்டத்தை கொண்டு வந்தால் மலையக மக்கள் முன்னணி ஆதரவு வழங்கும் என்றார்.

நுவரெலியாவில் நேற்று (29) நடைபெற்ற ஊடகவியாலளர் சந்திப்பின் போது மேற்கண்டவாறு கூறினார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

நகர, கிராம பகுதியில் வாழும் மக்களுக்கு பிரச்சினைகள் ஏற்படும் பொழுது கிராம உத்தியோகத்தர்களிடம் முறையிட்ட பின்னர் கிராமஉத்தியோகத்தரால் பிரதேச செயலகங்கள் மூலம் தீர்த்து வைக்கப்படுகிறது.

ஆனால், தோட்டத் தொழிலாளர்களுக்கு பிரச்சினைகள் ஏற்படும் பொழுது தோட்டக்கணக்கப்பிள்ளை ஊடாக தோட்ட துரைமார்களிடம் கூறும் பொழுது, தோட்டத்துரை பொலிஸ் நிலையத்திற்கு முறைப்பாடு செய்கின்றார்.

பொலிஸார் முறைபாடு செய்தவரை பொலிஸ் நிலையத்திற்கு அழைத்து மிரட்டி பயமுறுத்தப்படுகின்றார்கள். முறைப்பாட்டிற்கு தீர்வும் கிடைப்பதில்லை. இந்த நிலை மாற்றமடைய வேண்டும்.

மலையக இந்தியவம்சாவழி மக்களையும் தேசிய நீரோட்டத்தில் உள்வாங்கப்படவேண்டும். அன்றுதான் மலையகத்தில் வாழும் இந்தியவம்சாவழி மக்களுக்கு விமோசனம் கிடைக்கும்.

மலையகத்தில் 200 வருடங்களுக்கு மேல் வாழும் இந்தியவம்சாவழி மக்கள் அனுபவிக்கும் பிரச்சினைகளுக்கும் தீர்வு பெற்றுக்கொடுத்து அவர்களின் வாழ்வாதாரத்தையும் உயர்துவது சம்பந்தமாக பேசப்பட வேண்டும்.

இதுவும் தள்ளி போகின்ற பிரச்சினையாக இருக்கின்றது. இன்று நாங்கள் பிரஜாவுரிமை பற்றி பேசவில்லை. அவர்களுடைய வாழ்வாதாரத்தையும் சுயமான வாழ்க்கை நிலைமையையும் செயல்படுத்த வேண்டும். என்ற நிலைப்பாட்டில் நாங்கள் இருக்கின்றோம் என்றார்.

அக்கரப்பத்தனை அபிவிருத்தி தொடர்பில்

# கவனம் செலுத்தவும்

## மாவட்ட அபிவிருத்தி குழுக் கூட்டத்தில் கோரிக்கை

■ ஆ.ரமேஸ்



அக்கரப்பத்தனை பிரதேச சபைக்கு உட்பட்ட பிரதேச அபிவிருத்தி குறைப்பாடுகளில் அதிக கவனம் செலுத்தி குறைப்பாடுகளை நிவர்த்திக்க நடவடிக்கைகள் எடுக்க வேண்டும். என அக்கரப்பத்தனை பிரதேச சபை தவிசாளர் இராமன் கோபாலகிருஸ்ணன் நுவரெலியா மாவட்ட பிரதேச அபிவிருத்தி குழுவின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இந்த ஒருங்கிணைப்பு குழு கூட்டம் நுவரெலியா பிரதேச செயலகத்தில் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும், பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழு தலைவருமான ஜீவன் தொண்டமானின்தலைமையில் நேற்று முன்தினம் (28) நடைபெற்றது.

இதன்போதே தவிசாளர் இராமன் கோபாலகிருஸ்ணன் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

அக்கரப்பத்தனை பிரதேசத்தில் நிலவுகின்ற பின் தங்கியுள்ள அபிவிருத்திகளினால் பிரதேச மக்கள் மிகவும் பாதிக்கப்பட்டுள்ளனர்.

குறிப்பாக மூன்று வைத்தியசாலைகளை உள்ளடக்கிய அக்கரப்பத்தனை பிரதேசத்தில் திடீர் மரண பரிசோதகர் ஒருவர் இல்லை. அதேபோல திருமண பதிவாளரும் இல்லை.இதனால் பிரதேச மக்கள் இறப்பு, பிறப்பு, திருமண ஆவணங்களை பெற்றுக்கொள்வதில் பாரிய சிக்கலை எதிர் கொண்டுள்ளனர் என சுட்டிக்காட்டினார்.

மேலும் டயகம-போடைஸ் பிரதான பாதை மற்றும் டயகம-லிந்துலை பிரதான பாதை தொடர்பில் தெரிவித்த அவர், பயணத்தை மேற்கொள்ள முடியாத அளவிற்கு குண்டும் குழியுமாக மாறிவிட்டதாகவும் இவ்வீதகளின் குறைப்பாடுகளை சீர் செய்யுமாறும் கேட்டுக்கொண்டார்.

மேலும் திஸ்பனை,மன்றாசி ஆகிய இடங்களில் விளையாட்டு மைதானங்களில் உள்ள கற்களை அகற்றி இம் மைதானங்களை அபிவிருத்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும் எனவும் இதன் போது கோரிக்கையை முன்வைத்தார்.

மலையகத்தில் முதன்முறையாக

# சமூக சமையலறை கம்யூனிட்டி கிச்சன்

■ எஸ்.கணேசன்



கனேடிய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் சிலோன் யூத் மூவ்மெண்ட் மற்றும் பிரஜாசக்தி அபிவிருத்தி செயல் திட்டம் ஆகியன இணைந்து மலையகத்தில் முதன்முறையாக சமூக சமையலறை கம்யூனிட்டி கிச்சன் என்ற செயல்திட்டம் செவ்வாய்க்கிழமை (29) அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது.

இலங்கை மற்றும் மாலைதீவு நாடுகளுக்கான கனேடிய உயர்ஸ்தானிகர் டேனியல் பூட் மற்றும் பிரஜாசக்தி அபிவிருத்தி செயல் திட்டத்தின் பணிப்பாளர் நாயகமும் இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் உப தலைவருமாகிய பாரத் அருள்சாமி ஆகியோரின் தலைமையில் இந்த நிகழ்வு நடைபெற்றது.

இதன் போது கருத்து தெரிவித்த உப தலைவர் பாரத் அருள்சாமி,

மலையகத்தில் விசேடமாக பெருந்தோட்ட பகுதிகளில் சிறுவர்களுக்கான புரோட்டின் பற்றாக்குறை, கர்ப்பிணி தாய்மார்களுக்கு தேவையான போஷாக்கான உணவு வகைகளுக்கும் தட்டுப்பாடு நிலவி வருகிறது.

இந்நிலையில் கனேடிய அரசாங்கத்தின் நிதி உதவியுடன் சிலோன் யூத் மூவ்மென்ட்யின் வழிகாட்டலின் ஊடாக மத்திய மாகாணத்தில் முதல் கட்டமாக தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று பிரஜாசக்தி நிலையங்களின் ஊடாக இந்த சமூக சமையலறை வேலைத்திட்டம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

முதல் கட்டமாக கண்டி கெலாபொக்க, மஸ்கலியா ப்ரௌன்ஸ்வீக், மாத்தளை எல்கடுவ பிரஜாசக்தி நிலையங்களில் ஆரம்பித்துள்ளோம். இதனை அனைத்து பகுதிகளுக்கும் கொண்டு செல்வதே எமது நோக்கமாகும்.

இவ்வாறான சிக்கல் நிறைந்த சூழ்நிலையில் தேவை அறிந்து எமது வேண்டுகோளுக்கு இணங்க இத்திட்டத்தினை முன்னெடுக்க உதவிக்கரம் நீட்டிய கனேடிய தூதரகத்திற்கும், நேரடியாக விஜயம் செய்த உயரஸ்தானிகருக்கும், எனது மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்வதோடு, மேலும் இங்குள்ள இளைஞர், யுவதிகளின் திறன்சார் அபிவிருத்திக்கும் பெண்களின் தொழில் முனைவுக்கும் கனேடிய அரசாங்கம் தங்களது பூரண ஆதரவை வழங்க வேண்டும் என எதிர்பார்ப்பதாக பாரத் அருள்சாமி இதன் போது தெரிவித்தார்.



# காணி உறுதிகள் வழங்கப்பட்டன...

பதுளை, மொனராகலை மாவட்டங்களின் காணி உரிமைகளற்ற தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களிடையே தெரிவு செய்யப்பட்ட 600 பேருக்கு, காணியுறுதிகள் வழங்கும் நிகழ்வு, திங்கட்கிழமை (28) பதுளை அஞ்சல் நிலைய கேட்போர் கூடத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் அமைச்சர்களான ஹரின் பெர்னான்டோ, நிமால் சிறிபால சில்வா, இராஜாங்க அமைச்சர்களான அ. அரவிந்தகுமார், சாமர சம்பத் தசநாயக்க உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். எம். செல்வராஜா

சட்டவிரோத கட்டடங்களை அகற்ற

# அதிகாரம் வேண்டும்

■ மொஹொமட் ஆஸிக்

சட்ட விரோதமான கட்டடங்களை உடைத்து அகற்றும் அதிகாரத்தை உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்க வேண்டும் என்று அக்குறணை பிரதேச சபையின் தவிசாளர் இஸ்திஹார் இமாதுதீன் தெரிவித்தார்.

அக்குறணை பிரதேச செயலகத்தில் திங்கட்கிழமை (28) இடம் பெற்ற ஒருங்கினைப்பு குழு கூட்டத்தில் அவர் இதனை தெரிவித்தார்.

இங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர்,

அக்குறணை பிரதேசத்தில் சட்ட விரோதமான கட்டடங்கள் விடுமுறை தினங்களில் கட்டுவதாகவும் அதனை கட்டுபடுத்துவதற்கு எவ்வித அதிகாரமும் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இல்லை என்றும் அவர் தெரிவித்தார்.

அதனால், உள்ளூராட்சி மன்றங்களின் சட்டக் கோவையை திருத்தி சட்ட விரோத கட்டடங்களை அகற்றுவதற்கான அதிகாரத்தை உள்ளூராட்சி மன்றங்களுக்கு வழங்க வேண்டும் என்றார்.

பின்தங்கிய பாடசாலை மாணவர்களுக்கு

# கற்றல் உபகரணங்கள் வழங்கிவைப்பு

■ மொஹொமட் ஆஸிக்

கண்டி, நுவரெலியா மாவட்டங்களைச் சேர்ந்த பின்தங்கிய பாடசாலைகளில் கல்விப் பயிலும் மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்ளை இலவசமாக வழங்கும் திட்டம் ஒன்றை ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் நலன்புரி சங்கம் நடை முறைப்படுத்தவுள்ளது.

எதிர்வரும் டிசெம்பர் மாதம் இது முதற்கட்டமாக நடை முறைப் படுத்தப்படுவதுடன் வருடா வருடம் இத்திட்டத்தை மேற்கொள்ளவுள்ளதாக ஏற்றுமதி விவசாயத் திணைக்களத்தின் அபிவிருத்திப் பிரிவின் பணிப்பாளரும் மேற்படி நலன்புரி அமைப்பின் தலைவருமான கலாநிதி ஜனக லிந்தர தெரிவித்தார்.

**நன் கொடைகள் எதிர்பார்க்கப்படுவதாகவும், விரும்பியவர்கள் 071 -7178788 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அன்பளிப்புகளை வழங்க முடியும் என்றும் கேட்டுக்கொண்டார்**

பேராதனையிலுள்ள மேற்படி திணைக்களத்தில் நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்தார்.

தொடர்ந்து தெரிவித்த அவர்,

'அக்குறட சவிய' (எழுத்திற்கு சக்தி) என்றழைக்கப்படும் இத்திட்டத்தின் மூலம் குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்ளைச் சேர்ந்த மாணவர்களுக்கு பாடசாலை உபகரணங்கள், பாடப்புத்தகங்கள் பயிற்சிப் புத்தகங்கள், எழுது கருவிகள், மற்றும் பாதணிகள் போன்ற பாடசாலைக் கல்விக்கு தேவையான பல பொருட்களை வழங்க நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

கண்டி மற்றும் நுவரெலியா மாவட்டங்ளைச் சேர்ந்த பின்தங்கிய பிரதேசப் பாடசலைகளைச் சேர்ந்த குறைந்த வருமானம் கொண்ட குடும்பங்களில் இருந்து இதற்காக மாணவர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

மேற்படி திட்டத்திற்கு நலன் விரும்பிகளிடமிருந்து நன் கொடைகள் எதிர்பார்க்கப்படுவதாகவும், விரும்பியவர்கள் 071 7178788 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்பு கொண்டு அன்பளிப்புகளை வழங்க முடியும் என்றும் கேட்டுக்கொண்டார்.

அபடீன் நீர்வீழ்ச்சியில் காணாமல் போன

# இளைஞன் சடலமாக மீட்பு

■ ரஞ்சித் ராஜபக்ஷ



நண்பர் ஒருவரின் பிறந்த நாளைக் கொண்டாடுவதற்காக நோட்டன்- அபடீன் நீர்வீழ்ச்சிக்கு சென்று காணாமல் போன இளைஞனின் சடலம் செவ்வாய்க்கிழமை (29) காலை மீட்கப்பட்டதாக கினிகத்தேனை பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த இளைஞன் திங்கட்கிழமை (28) காணாமல் போயிருந்த நிலையில், நீர்வீழ்ச்சியின் 15அடி ஆழத்திலிருந்து சடலம் மீட்கப்பட்டதாக தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாறு சடலமாக மீட்கப்பட்ட இளைஞன் பொகவந்தலாவை-லின்ஸ்ட்ட் தோட்டத்தைச் சேர்ந்த 17 வயதான கிருஸ்ணன் வினுசான் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

கினிகத்தேனை நகரில் வர்த்தக நிலையமொன்றில் கடமையாற்றி வரும் குறித்த இளைஞன் 28ஆம் திகதி நண்பனின் பிறந்தநாளை கொண்டாட அபடீன் நீர்வீழ்ச்சி பகுதிக்கு சென்று, அங்கு நீராடிக் கொண்டிருந்த போதே, நீரில் மூழ்கி உயிரிழந்துள்ளார்.

நாட்டின் பல பகுதிகளிலிருந்தும்

# நுவரெலியாவுக்கு மாணவர்கள் சுற்றுலா



■ ரஞ்சித் ராஜபக்ஷ

வருடாந்த கல்வி சுற்றுலாவை மேற்கொண்டு, நாடு பூராகவும் இருந்து அதிகளவான மாணவர்கள் நுவரெலியாவுக்கு 5 வருடங்களின் பின்னர் நேற்று (29) வருகைத் தந்திருந்தனர்.

கடந்த காலங்களில் நாட்டில் ஏற்பட்ட பல்வேறு பிரச்சினைகள் மற்றும் கொரோனா காரணமாக சுமார் நான்கு வருடங்களாக பாடசாலை மாணவர்கள் கல்வி மற்றும் பொழுதுப்போக்கு பயணங்களுக்கு செல்வதற்கு தடை விதிக்கப்பட்டிருந்தது.

நாட்டின் பொருளாதார மற்றும் சுகாதார நிலைமைகளின் மீட்சியுடன், காலி, மாத்தறை, கொழும்பு மற்றும் வடக்கு, கிழக்கு மாகாணங்களைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவர்கள் கடந்த சில காலமாக இரண்டாம் பாடசாலை தவணை விடுமுறைக்கு முன்னர் வருடாந்த கல்வி மற்றும் பொழுதுப்போக்கு பயணத்திற்காக நுவரெலியா நகரத்தை தெரிவு செய்துள்ளனர்.

கல்வி மற்றும் பொழுதுபோக்கிற்காக நுவரெலியாவுக்கு வருகை தரும் ஆயிரக்கணக்கான பாடசாலை மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் வகையில் நுவரெலியா பொலிஸார் விசேட பாதுகாப்பு வேலைத்திட்டத்தை முன்னெடுத்துள்ளதாக நுவரெலியா பொலிஸ்மா அதிபர் ஹேமலால் ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

நுவரெலியா மாநகரசபையானது பாடசாலை மாணவர்களுக்கு முறையான சுகாதாரத்தை வழங்குவதற்கு உழைத்துள்ளதாக நுவரெலியா மாநகரசபையின் மாநகர சுகாதாரப் பிரிவு தெரிவித்துள்ளது.

பல குறைபாடுகளுடன் காணப்படும்

# சபெல்லேவெல பாடசாலைக்கு ஆளுநர் விஜயம்

■ எம். செல்வராஜா

பாடசாலையின் ஆசிரியர் பற்றாக்குறை மற்றும் பாடசாலை செயலிழந்து போவதைத் தடுப்பதற்காக, சபல்லேவெல மகா வித்தியாலயத்தின் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பெற்றோர்கள் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, ஊவா மாகாண ஆளுநர் ஏ.ஜே.எம். முஸம்மில் கண்காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டார்.

சுமார் 60 வருட வரலாற்றைக் கொண்ட குறித்த பாடசாலையில் 6ஆம் வகுப்பு முதல் 13ஆம் வகுப்பு வரை கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும், 582 மாணவர்களுக்கு 27 ஆசிரியர்கள் மட்டுமே பணிபுரிவதாகவும் பாடசாலை அபிவிருத்திச் சங்கம் தெரிவித்துள்ளது.



இந்த பிரச்சினைகள் தொடர்பில் ஆராயும் நோக்கில், ஊவா மாகாண ஆளுநர் குறித்த பாடசாலைக்குக் கள விஜயம் ஒன்றை மேற்கொண்டு, அங்கு காணப்படும் ஆசிரியர்களின் பற்றாக்குறை தொடர்பில் அதிபர், பாடசாலை அபிவிருத்திச் சங்கம் மற்றும் பெற்றோர்களுடன் விரிவாகக் கலந்துரையாடியதன் பின்னர், அதனை நிவர்த்தி செய்யும் வகையில் முன்னெடுக்க வேண்டிய நடவடிக்கைகளை தொடர்பில் மாகாண கல்வி பணிப்பாளர் மற்றும் வலயக் கல்வி பணிப்பாளர்களுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

**60 வருட வரலாற்றைக் கொண்ட குறித்த பாடசாலையில் 6ஆம் வகுப்பு முதல் 13ஆம் வகுப்பு முதல் வரை கல்வி நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும், 582 மாணவர்களுக்கு 27 ஆசிரியர்கள் மட்டுமே பணிபுரிவதாகவும் தெரிவித்துள்ளது.**

இந்த பாடசாலையில் காணப்படும் ஆசிரியர் விடுதியையும் கூடிய விரைவில் பாவனைக்கு உகந்த முறையில் சீர்செய்து மீட்டெடுக்குமாறும் சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை வழங்கினார்.

# பேச்சோடு நின்றுவிடாது எல்லோருக்குமான தீர்வே நல்லது

இனப் பிரச்சினைக்கான தீர்வுத்திட்டம் பற்றி இப்போது மும்முரமாகப் பேசப்படுகின்றது. இதேபோன்று இதற்கு முன்னரும் பல தடவை இவ்விவகாரம் பேசப்பட்டது. கடைசியில் பேச்சோடே முடிந்துபோனது.

இலங்கை அரசியலில் எதுவும் நடந்தால்தான் உண்மை. ஆயினும், இதனையெல்லாம் தாண்டி இப்போது தமிழ் மக்கள் மத்தியில் ஒரு நம்பிக்கை துளிர்க்கத் தொடங்கியுள்ளதை மறுக்கவியலாது.

'அடுத்த சுதந்திர தினத்திற்குள் தீர்வு எட்டப்படும்' என்று நாட்டின் உயரிய சபையான பாராளுமன்றத்திலேயே ஜனாதிபதி அறிவித்துள்ளார். இதனை குழப்பக் கூடிய அணியின் தலைவர் எனக் கருதப்படும் முன்னாள் ஜனாதிபதி மஹிந்தவும் கூட 13 இற்கு அப்பாலான தீர்வுக்கு பச்சைக் கொடி காட்டியுள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச ஒற்றையாட்சிக்குள் அதிகாரப் பகிர்வை வழங்க ஒத்துழைப்பதாக குறிப்பிட்டுள்ளார். இதுவெல்லாம் வழக்கமான களநிலைமைகளை விடவும் சற்று சாதகமானதாகும். எனவேதான் தமிழ் தரப்பின் நம்பிக்கைக்கு வலுவடைந்துள்ளது.

தமிழ் மக்கள் நீண்டகாலமாக போராடி வருகின்றார்கள். அவர்கள் பட்ட துன்பங்கள், இழப்புக்களுக்கு கணக்கில்லை. எனவே இந்த அரசாங்கமும் அவர்களை ஏமாற்றிவிடாமல் தீர்வு ஒன்றை வழங்க வேண்டும்.

தமிழ் தரப்புக்கள் தமது அபிலாசைகளை வென்றெடுக்கின்ற சமகாலத்தில், யதார்த்தபூர்வமாகவும் சிந்திக்க வேண்டியுள்ளது. இலங்கைச் சூழலில் நடைமுறைச் சாத்தியமற்ற கோரிக்கைகளை மீள் பரிசீலனை செய்ய வேண்டும். சாத்தியமானவற்றை சாதித்துக் கொள்ள ஒற்றுமையுடனும், விட்டுக் கொடுப்புடனும் செயற்பட முன்வர வேண்டும்.

அதுமட்டுமன்றி, இனப் பிரச்சினைக்கு தீர்வைப் பெறுவது மட்டுமே தமிழ் மக்களுக்கு இன்றுள்ள பிரச்சினை அல்ல என்பதையும் புரிந்து கொள்ள வேண்டும்.

வடக்கு, கிழக்கில் மட்டுமன்றி இலங்கையின் எல்லாப் பாகத்திலும் வாழ்கின்ற சாதாரண தமிழர்களுக்கு இதற்கப்பால் இன்னும் தீர்க்கப்படாத குறுங்கால வாழ்வியல் நெருக்கடிகளும் எதிர்பார்ப்புக்களும் உள்ளன என்பதை நினைவிற் கொள்வது சிறந்தது.


ஆயுத மோதலோடு தொடர்புபட்ட மக்கள் வடக்கு, கிழக்கைச் சேர்ந்தவர்கள் என்றாலும், தமிழர்களுக்கான தீர்வு என்று வரும்போது கொழும்பிலும், மலையகத்திலும் வாழ்கின்ற மக்களையும் மனதில் வைத்துச் செயற்படுவது தார்மீகக் கடமையாகும்.

அதேவேளை, இன்னுமொரு முக்கிய விடயத்தையும் கவனிக்க வேண்டும். அதாவது, இது சிங்களப் பெரும்பான்மையைக் கொண்ட ஒரு பல்லின நாடு என்ற அடிப்படையில், எல்லா சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒரு தீர்வை பெற முனைவது நல்லது.

இந்த நாட்டில் யுத்தம் ஏதோ ஒரு வகையில் எல்லா இனங்கள் மீதும் தாக்கத்தை செலுத்தியிருக்கின்றது. அந்த அடிப்படையில், வழங்கப்படும் தீர்வு என்பது வடக்கு, கிழக்கு தமிழர்களை திருப்திப்படுத்துவது மட்டுமன்றி, நாட்டில் வாழும் முஸ்லிம் மற்றும் சிங்கள சமூகங்களும் ஏற்றுக் கொள்ளக் கூடிய ஒன்றாகவும் இருந்தால் மட்டுமே, அந்தத் தீர்வு இந்த தீவு நிம்மதி கொள்வதற்கான இறுதித் தீர்வாக அமையும்.








## வாழ்வியல் தரிசனம்

தங்களுக்குப் பிடித்தவர்களைவிட, தங்களுக்குப் பிடிக்காதவர்கள் பற்றியே மனிதர்கள் பெரும்பாலும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். திரைப்படங்களில் கதாநாயகனுக்கு கிடைக்கும் முக்கியத்துவம், வில்லனுக்கும் கிடைக்கும்; வில்லன், வில்லி இல்லாதுவிட்டால், கதைகளில் சுவாரஸ்யம் இருக்காது.

ஆனால், அநேகர் வில்லன்களை விரும்புவதுபோல, விரும்பாத மனிதர்களையே விமர்சனம் செய்வார்கள். ஆனால், இவர்கள் சொல்வதைப்போல், இவர்கள் குறிப்பிடும் நபர், அவர் போல் ஏசிக்கொண்டே இருக்மாட்டார். நேரத்தைதச் செலவழிக்களவரையாவது திட்டுவதே சுவாரஷ்யமானது என எண்ணக்கூடும். பல ஆண், பெண்கள் கூடினால், பக்கத்துவீட்டுக்காரர்களின் பிரச்சினையையே ஆராய்வார்கள். இது ஒரு வன்முறை போன்றது.

ஒருவர் விடும் பிழைகளை நேரடியாகச் சுட்டிக்காட்டாமல், மறைமுகமாக அவரை வைது கொள்வது பிழையான அணுகுமுறையாகும். இதனால் என்ன லாபம்?

அதனை விடுத்து யாவரையும் ளபாராட்டி மகிழ்க! இதயம் இதனால் சுத்தமாகும். நல்லவற்றை மட்டும் பேசுக!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# விட்டுக்கொடுப்பு இல்லாது தீர்வில்லை



எம்.எஸ்.எம். ஐயூப்

ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தனவின் ஆட்சிக் காலத்தில் அமைச்சரவைக் கூட்ட முடிவுகளைத் தெரிவிக்கும் ஊடகவியலாளர் மாநாடு பெரும்பாலும் அப்போதைய இராஜாங்க அமைச்சராக (தகவல் அமைச்சராக) இருந்த ஆனந்த திஸ்ஸ டி அல்விஸின் தலைமையிலேயே நடைபெற்றறது.

அல்விஸ், 1950களில் பிரதமராக இருந்த ஜோன் கொத்தலாவலவின் செயலாளர்களில் ஒருவராகவும் கடமையாற்றியவர். இந்த மாநாடுகளின் போது அவர் மிகவும் சுவாரசியமான கதைகளைச் சொல்வார். அவ்வாறான ஒரு மாநாட்டின் இறுதியில் அவர் *off the record* (வெளியிட வேண்டாம்) என்று கூறி ஒரு கதையைக் கூறினார். இது தான் அந்தக் கதை.

இந்திய வம்சாவளி மக்களின் பிரஜா உரிமை 1949 ஆம் ஆண்டு இரத்துச் செய்யப்பட்டு இருந்த நிலையில் ஜோன் கொத்தலாவல அம்மக்களின் பிரச்சினையைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவதற்காக புதுடெல்லிக்குச் சென்றிருந்தார். அப்போது இந்தியப் பிரதமராக இருந்த ஜவஹர்லால் நேருவுடன் அவர் பேச்சுவார்ததை நடத்தும் போது ஒரு கட்டத்தில் நேரு இவ்வாறு கூறினார்.

'மிஸ்டர் கொத்தலாவல, உங்கள் நாடு சிறியதாக இருந்தாலும் இந்தப் பத்து இலட்சம் மக்களை உள்வாங்கிக் கொள்வது உங்கள் நாட்டுக்கு பெரிய விடயமல்ல. ஆனால், நீங்கள் அதனைச் செய்யப் போனால் உங்கள் எதிர்க் கட்சிக்காரர்கள் உங்களை அரசியலில் இருந்தே விரட்டிவிடுவார்கள். இவர்களை உள்வாங்கிக் கொள்வது இந்தியாவுக்கு அதை விட எவ்வளவோ சிறிய விடயம். ஆனால், எங்கள் எதிர்க் கட்சிகளும் அதற்கு இடம் கொடா. எனவே, இதனை நாம் இரு நாடுகளினது அதிகாரிகளிடம் ஒப்படைத்தால் அவர்கள் உலக அழிவு வரை அதைப் பற்றிப் பேச்சுவார்த்தை நடத்துவார்கள். எங்களுக்கும் எவ்வித ஆபத்தும் ஏற்படாது.'

அன்று நேரு கூறியதைப் போல் அதிகாரிகளிடம் ஒப்படைக்காவிட்டாலும் இலங்கையில் இனப் பிரச்சினை தொடர்பான பேச்சுவார்ததைகளும் உலக அழிவு வரை நடைபெறும் போல் தான் தெரிகிறது.

பிரஜா உரிமை தொடர்டபான பேச்சுவார்ததைகள், 50:50 கோரிக்கை தொடர்பான பேச்சுவார்த்தை, பண்டா-செல்வா ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்தை, இந்திய வம்சாவளி மக்கள் தொடர்பான சிறிமா-சாஸ்திரி பேச்சுவார்த்தை, அதே பிரச்சினை தொடர்பான சிறிமா-இந்திரா பேச்சுவார்ததை, டட்லி-செல்வா ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தை, ஜே.ஆரின் வட்ட மேசை மாநாடு, அரசியல் கட்சி மாநாடு (PPC), இந்திய அதிகாரிகளான கோபாலசுவாமி பார்த்தசாரதி மற்றும் ரொமேஷ் பண்டாரி ஆகியோருடனான பேச்சுவார்த்தைகள், திம்புப் பேச்சுவார்த்தைகள், இலங்கை இந்திய ஒப்பந்தத்துக்கான பேச்சுவார்த்தைகள், ரணசிங்க பிரேமதாசவின் சர்வ கட்சி மாநாடு, புலிகளுடனும் தமிழ் கட்சிகளுடனும் பல அரசாங்கங்கள் நடத்திய பேச்சுவார்ததைகள் போன்ற பல பேச்சுவார்ததைகள் 1940களில் இருந்து இன்று வரை இடம்பெற்றுள்ளன.

அதற்குப் புறம்பாக தமிழ் மற்றும் முஸ்லிம் தரப்பினர்கள் இடையே எத்தனையோ சுற்றுப் பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளன. எத்தனையோ முறை இரு சாராரும் உடன்பாடுகளுக்கும் வந்துள்ளனர். ஆனால், இன்னமும் வடக்கு, கிழக்கு மாகாணங்களை இணைப்பதா இல்லையா என்று வாதிட்டுக் கொண்டும் இருக்கிறார்கள்.

பொதுவாக இனப் பிரச்சினை இன்னமும் ஏறத்தாழ தொடங்கிய இடத்திலேயே இருக்கிறது. தமிழ் மக்களுக்கு என்ன பிரச்சினை இருக்கிறது என்று சிங்கள் மக்கள் இன்னமும் கேட்கிறார்கள். சிங்களத் தலைவர்கள் சமஷ்டி முறையை பிரேரித்த போது தமிழர்கள் எதிர்த்தார்கள். இப்போது தமிழர்கள் அதனைக் கேட்கும் போது சிங்கள மக்கள் அதனை எதிர்க்கிறார்கள். 40 ஆண்டுகளாக அதிகார பரவலாக்கலைப் பற்றி பேச்சுவார்த்தை நடைபெற்றும் மாகாண சபைகளை அறிமுகப்படுத்தி சுமார் 35 ஆண்டுகள் கழிந்தும் அதிகாரப் பரவலாக்கலால் நாடு பிரிந்துவிடும் என்று சிங்கள் அரசியல்வாதிகள் இன்னமும் வாதிடுகிறார்கள்.

இந்த நிலையில் தான் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இனப்பிரச்சினையைப் பற்றி பேச்சுhவர்த்தை நடத்த அரசியல் கட்சிகளுக்கு கடந்த வாரம் அழைப்பு விடுத்தார். பாராளுமன்றத்தில் வரவு-செலவுத் திட்ட விவாதத்தின் போது அந்த அழைப்பை விடுத்த அவர் அதிகார பரவலாக்கலை விரும்புகிறீர்களா என ஒவ்வொரு கட்சித் தலைவர்களிடமும் கேட்டார்.

பேச்சுவார்த்தையே தீர்வுக்காகன ஒரே வழி என்பதால் நேர்மையானதோ இல்லையோ ஜனாதிபதியின் இந்த அழைப்பு பாராட்டுக்குறியதாகும். ஆனால், சுமார் 75 ஆண்டுகளாக நடைபெறும் இந்தப் பேச்சுவார்ததைகளைப் பற்றிய அனுபவத்தின் அடிப்படையில் பார்த்தால் இந்நாட்டு மக்களில் குறைந்தபட்சம் ஒரு சத வீதத்தினராவது ஜனாதிபதி நடத்தப் போகும் பேச்சுவார்தைகள் வெற்றியளிக்கும் என்று நம்புகிறார்களா என்பது சந்தேகமே.

அது அவர் மீதான நம்பிக்கையின்மை மட்டுமல்ல. ஓரளவுக்கு அதுவும் ஒரு காரணம் தான். அதேவேளை அது பொதுவாக தமிழ், முஸ்லிம் மற்றும் சிங்கள அரசியல்வாதிகள் இந்த விடயத்தில் திறந்த மனத்துடன் பேச்சுவார்த்தை நடத்துவார்களா என்பதைப் பற்றிய நம்பிக்கையின்மையேயாகும்.

தமிழ் தலைவர்கள் அதிகார பரவலாக்கல் வேண்டும் என்கிறார்கள. சில சிங்களத் தலைவரகள் அதிகார பரவலாக்கலால் நாடு பிளவுபடும் என்று கூறுகிறார்கள். ஆனால் 34 ஆண்டுகளாக மாகாண சபைகளுக்கு அரசியல் அதிகாரம் பரவலாக்கப்பட்டுத் தான் இருக்கிறது. அவ்வாறு இருந்தும் எந்தவொரு சாராரும் விட்டுக்கொடுக்கவும் தயாராக இல்லை.

தமிழ் தலைவர்கள் இனப் பிரச்சினைக்கு சமஷ்டி முறையிலான தீர்வே வேண்டும் என்கிறார்கள். அதற்குக் குறைந்த ஒரு தீர்வை எந்தவொரு தமிழ் கட்சியாவது ஏற்றுக் கொண்டால் ஏனைய தமிழ் கட்சிகள் அக்கட்சியின் தலைவர்களை துரோகிகள் என்பார்கள். அதேபோல் சிங்களத் தலைவர் ஒருவர் சமஷ்டி முறையை ஏற்றுக் கொண்டால் இனவாத சிங்களக் கட்சிகள் அவரை துரோகி என்பார்கள். துரோகிப் பட்டம் அடுத்த தேர்தலில் தம்மை பாதிக்கும் என்பதால எவரும் அதனை ஏற்கத் தயாராக இல்லை. இவ்வாறு எந்தவொரு தரப்பினரும் இறங்கி வரத் தயாராக இல்லாவிட்டால் பொது இணக்கப்பாட்டுக்கு வருவது எவ்வாறு?

2015 ஆம் ஆண்டு பதவிக்க வந்த 'நல்லாட்சி' அரசாங்கம் புதிய அரசியலமைப்பொன்றை தயாரிப்பதற்காக 2016 ஆம் ஆண்டு ஜனவரி மாதத்தில் அரசியலமைப்புச் சபையொன்றை நிறுவியது. அச்சபையால் தயாரிக்கப்பட்ட இடைக்கால அறிக்கையை அப்போதைய பிரதமர் ரணில் விக்கிரமசிங்க 2017 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தார்.

அதில் தமிழர்கள் வெறுக்கும் ஒற்றை ஆட்சி என்ற பதம் தமிழில் இருக்கவில்லை. சிங்கள மொழியில் இருந்தது. சிங்கள தேசியவாதிகள் வெறுக்கும் சமஷ்டி என்ற பதம் எந்த மொழியிலும் இருக்கவும் இல்லை. இனப் பிரச்சினைக்கான தீர்வாக அதில் 'ஒருமித்த நாடு' என்ற எண்ணக்கருவே தமிழ் மொழியில் முன்வைக்கப்பட்டு இருந்தது. இதனை தமிழ் தேசியக் கூட்டமைப்பு ஏற்றுக் கொண்டது. ஆனால் அது சமஷ்டிக் கோரிக்கையை நிராகரிப்பதாகும் என்றும் சிங்கள பௌத்த ஆதிக்கத்தை அங்கீகரிப்பதாகவும் அப்போதைய வடக்கு கிழக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரன் உள்ளிட்ட பலர் கூறினார்.

அதேவேளை அந்த அறிக்கையானது தந்திரமாக சமஷ்டி முறையை திணிக்கும் முயற்சி என்று தேசிய சுதந்திர முன்னணியின் தலைவர் விமல் வீரவன்ச உள்ளிட்ட சிங்கள் இனவாதிகள் கூறினர். இந்த இழுபறியோடு வேறு பல அரசியல் பிரச்சினைகள் உருவாகி அந்த அரசியலமைப்பு தயாரிப்பு முயற்சி கைவிடப்பட்டது. சண்டையிட்டோர் அந்தத் திட்டத்தின் பெயரை வைத்து தான் சண்டையிட்டார்களேயொழிய அதன் உள்ளடக்கத்தை எவரும் எதிர்க்கவில்லை.

இது ஒற்றையாட்சி என்ற பதத்தை கைவிட சிங்களத் தலைவர்களுக்கும் சமஷ்டி என்பதைக் கைவிட தமிழ் தலைவர்களுக்கும் எவ்வளவு கஷ்டமாக இருக்கிறது என்பதை எடுத்துக் காட்டுகிறது. எனினும் ஜனாதிபதி சந்திரிகா 1995 ஆம் ஆண்டு முன்வைத்து 'பக்கேஜ்' என்ற அக்காலத்தில் சகலராலும் அழைக்கப்பட்ட தீர்வுத் திட்டத்தில் இலங்கை ஒரு பிரந்தியங்களின் ஒன்றியம் என்றே குறிப்பிடப்பட்டு இருந்தது. ஒற்றையாட்சி என்ற பதம் அதில் இருக்கவில்லை. அதுவே பொருத்தமான தீர்வு என்று சில தமிழ் தலைவர்களும் கடந்த வாரம் கூறியிருந்தனர்.

அத்திட்டத்தை ஏற்றிருக்கலாம் என்று புலிகளின் ஆலோசகர் அன்டன் பாலசிங்கமும் 2003 ஆம் ஆண்டு கிளிநொச்சியில் புலிகளின் புதிய நீதிமன்றத் தொகுதியை திறந்து வைக்கும் வைபவத்தின் போது கூறினார். ஆனால் ஜீ.எல். பீரிஸுடன் சேர்ந்து அந்தத் தீர்வுத் திட்டத்தை தயாரித்த நீலன் திருச்செல்வத்தை புலிகளே 1999 ஆம் ஆண்டு தற்கொலை குண்டுதாரி ஒருவர் மூலம் கொன்றனர்.

ஒற்றையாட்சிக்குப் பதிலாக சமஷ்டி முறையின் அடிப்படையில் இனப் பிரச்சினைக்கு தீர்வு காண்பது என்று புலிகளும் ரணிலின் அரசாங்கத்தின் பிரதிநிதிகளும் 2002 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் ஒஸ்லோ நகரில் வைத்து உடன்பாட்டுக்கு வந்தனர். ஆனால் புலிகள் அந்த இணக்கப்பாட்டை உதறித் தள்ளிவிட்டு 2005 ஆம் ஆண்டு இறுதியில் மீண்டும் போரை ஆரம்பித்தனர்.

இந்த ஒற்றையாட்சி - சமஷ்டி சர்ச்சை விடயத்தில் போலவே வடக்கு, கிழக்கு இணைப்பு விடயத்திலும் சம்பந்தப்பட்ட எவரும் விட்டுக்கொடுக்கத் தயாரில்லை. அவ்வாறாயின் ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் பேச்சுவார்த்தை நடத்தி எதனை சாதிக்கப் போகிறார்கள்? நியாயத்தின் அடிப்படையில் விட்டுக்கொடுக்க சகல தரப்பினரும் தயாராக இல்லாவிட்டால் பேச்சுவார்த்தை என்ற பெயரில் காலத்தையும் சிரமத்தையும் வீணடித்து போதாதக்குறைக்கு இன உணர்வுகளையும் தூண்டிவிடுவதை விட சும்மா இருப்பதே மேல் என்றும் வாதிடலாம். எனினும் பேச்சுவார்த்தையைத் தவிர் தீர்வுக்கு வேறு வழி இருப்பதாகவும் தெரியவில்லை.

## கடிதங்கள்

### அதிபர்கள் கவலை:

அதிபர் சேவை புதிய பிரமாணக் குறிப்புக்கு அமைய அதிபர் சேவை தரம் 3 க்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டவர்கள், அதிபர் சேவை தரம் 2 இற்குப் பதவி உயர்வு பெறுவதாயின், அடிப்படை அதிபர் திறன் விருத்தி பயிற்சி பாடநெறியை (BPP) கட்டாயமாக பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.

இந்நிலையில், 2016 இல் அதிபர் சேவை தரம் 3 இற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட அதிபர்களுக்கு, இப்பயிற்சி பாடநெறி பல மாகாணங்களில் நிறைவடைந்துள்ளது. இதற்கான சான்றிதழை, சில மாகாணங்கள் தமது கல்வி வலயங்களினூடாக உரிய அதிபர்களுக்கு, அவர்களின் பதவி உயர்வைக் கருத்தில் கொண்டு வழங்கிவிட்டன.

இந்நிலையில், கிழக்கு மாகாணத்திலும் அதிகமான தரம் 3 அதிபர்களுக்கு இரு கட்டங்களில் இப்பயிற்சி, பாடநெறி கிழக்கு மாகாண கல்வி திணைக்களத்தால் சத்துருகொண்டான் சர்வோதய நிலையத்தில் வதிவிட செயலமர்வாக நடத்தி முடிக்கப்பட்டுள்ளது. இவ்வாறு பயிற்சி பாடநெறியை நிறைவு செய்தவர்களுக்கு, சான்றிதழ் வழங்குவதில் இழுத்தடிப்பு நிலை காணப்படுகின்றது.

சுமார் 4,000 மேற்பட்ட அதிபர்கள், இலங்கை அதிபர் சேவை தரம் 3 இல் கடமை புரிகின்றனர். இச்சான்றிதழ் வழங்குவதிலுள்ள தாமதம் அவர்களின் பதவி உயர்வைத் தாமதிக்கலாம்.

இது குறித்து, அதிபர் சேவை பதவி உயர்வை எதிர்பார்த்திருக்கும் அதிபர்கள் கவலை அடைந்துள்ளனர்.




# அமைச்சரவை தீர்மானங்களில் சில...

### 01. புரிந்துணர்வு ஒப்பந்தம்

இலங்கை ஏற்றுமதி அபிவிருத்திச் சபை மற்றும் சுவிற்சர்லாந்து அரசின் பொருளாதார விவகாரங்கள் இராஜாங்க செயலாளர் அலுவலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் இறக்குமதி ஊக்குவிப்பு வேலைத்திட்டத்துடன் இணைந்து பதனிடப்பட்ட உணவுகள், பாதுகாக்கப்பட்ட மீன் மற்றும் கடலுணவுகள் மற்றும் பெறுமதி சேர்க்கப்பட்ட துணிகள் போன்ற ஏற்றுமதி உற்பத்திகளுக்காக விஞ்ஞான ரீதியான கற்கையொன்றை மேற்கொள்வதற்காக புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றை மேற்கொள்வதற்காக யோசனை தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கையின் ஏற்றுமதி பொருட்களுக்கான ஐரோப்பிய சந்தையை அணுகுவதற்கான வாய்ப்புக்களை விரிவுபடுத்தல் இக்கற்கையின் நோக்கமாகும். குறித்த கற்கைக்கு சுவிற்சர்லாந்து பிராங்க் 100,000 நிதி சுவிற்சர்லாந்தின் இறக்குமதி ஊக்குவிப்பு வேலைத்திட்டத்தின் மூலம் வழங்கப்படவுள்ளது. அதற்கமைய, முன்மொழியப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தில் கையொப்பமிடுவதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 02. கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தல்

இந்திய நிதியுதவியின் கீழ் அதிக விளைவுகளைக் கொண்ட சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்தும் வேலைத்திட்டம் 2005 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்காக 2005-2010, 2010-2015 மற்றும் 2015-2020 வரையான காலப்பகுதிகளுக்கான இரு நாடுகளுக்கிடையில் புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் கையொப்பமிடப்பட்டுள்ளன.

குறித்த கருத்திட்டத்தின் கீழ் கல்வி, சுகாதாரம் மற்றும் சமூக அபிவிருத்தித் துறைகளில் உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்காக முன்னுரிமை வழங்கப்படுகின்றது. இக்கருத்திட்டத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படும் உப கருத்திட்டமொன்றின் செலவு 300 மில்லியன் இலங்கை ரூபாய்களாக மட்டுப்படுத்தப்படுவதுடன், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நடைமுறைப்படுத்தப்படும் மொத்தக் கருத்திட்டங்களின் உயர்ந்தபட்ச பெறுமதி 5 பில்லியன் இலங்கை ரூபாய்களாக அமையும். ஆனாலும், நாட்டில் தற்போது நிலவுகின்ற நெருக்கடி மற்றும் பணவீக்கம் காரணமாக 300 மில்லியன் ரூபாய்கள் உயர்ந்தபட்ச பெறுமதி எல்லையில் ஒருசில கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துவது சிரமமாக அமைவதால், குறித்த எல்லையை 600 மில்லியன் ரூபாய்களாக அதிகரிப்பதற்கும், எந்தவொரு சந்தர்ப்பத்திலும் நடைமுறைப்படுத்தப்படும் மொத்தக் கருத்திட்டங்களின் உயர்ந்தபட்ச பெறுமதியை 10 பில்லியன் இலங்கை ரூபாய்களாக அதிகரிப்பதற்கும் இரு தரப்பினர்களும் உடன்பாடு தெரிவித்துள்ளனர். அதற்கமைய, இரு நாடுகளுக்கிடையில் கையொப்பமிடப்பட்டுள்ள புரிந்துணர்வு ஒப்பந்தத்தைத் திருத்தம் செய்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 03. வசதியளித்தல் கருத்திட்டம்

'பசுமைக் கொள்கைகளின் அடிப்படையிலான இலங்கை' மற்றும் 'உள்ளடக்கப்பட்ட ஒற்றுமையான சமூகத்தை' உருவாக்குவதற்கு ஒத்துழைப்பு வழங்கும் நோக்கில் 2021 தொடக்கம் 2027 வரையான காலப்பகுதிக்காக இலங்கைக்கான ஐரோப்பிய ஒன்றியத்தின் பல்வருட அளவுகோல் கருத்திட்டத்தின் கீழ் நிதியனுசரணை வழங்குவதற்கு உடன்பாடு தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய, குறித்த துறைகள் மற்றும் ஒத்துழைப்புப் பணிகளுக்காக 2021-2024 ஆம் ஆண்டு காலப்பகுதிக்காக 80 மில்லியன் யூரோ நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அதன்கீழ் இலங்கையில் 'சமூக சகவாழ்வு மற்றும் சமாதானத்தைக் கட்டியெழுப்புதல் கருத்திட்டத்தை' நடைமுறைப்படுத்துவதற்காக 16 மில்லியன் யூரோ நிதியை வழங்குவதற்கு ஐரோப்பிய ஒன்றியம் உடன்பாடு தெரிவித்துள்ளது.

அதற்கமைய குறித்த நிதி வழங்கலைப் பெற்றுக் கொள்வதற்காக ஐரோப்பிய ஒன்றியத்துடன் நிதியுதவி ஒப்பந்தங்களை மேற்கொள்வதற்காக அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 04. சர்வதேச நீர் மாநாடு 2022

2022.12.14 ஆம் திகதி தொடக்கம் 2022.12.16 வரை 'நிலைபெறுதகு அபிவிருத்தி ஒத்துழைப்பு, பங்களிப்பு மற்றும் பொருத்தமான தொழிநுட்பங்கள் தொடர்பான சர்வதேச நீர் மாநாடு  2022' ஒழுங்குபடுத்துவதற்கு தேசிய நீர் வழங்கல் மற்றும் வடிகாலமைப்பு சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது.

நீர் தொடர்பான தொழில்வாண்மையாளர்கள், வெளிநாட்டு பிரிதிநிதிகள், சர்வதேச அமைப்புக்கள், அரச உத்தியோகத்தர்கள் மற்றும் ஊடகவியலாளர்களை ஒருங்கிணைத்தல், ஆய்வுகளுக்கான கருத்துக்கள் மற்றும் அறிவுப்பகிர்வு, நீர் தொடர்பான வாண்மையாளர்களுடன் தொடர்புகளை ஏற்படுத்தல் மற்றும் பல்வேறு நாடுகளில் நீர் தொடர்பான அனுபவங்கள் மற்றும் வெற்றியளிப்புக்களை பகிர்ந்துகொள்ளல் போன்றவற்றை நோக்கமாகக் கொண்டு குறித்த மாநாட்டை நடாத்துவதற்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 05. இடையிலான புரிந்துணர்வு ஒப்பந்தம்

பிரான்ஸ் அரசின் பொருளாதார, நிதி மற்றும் மீட்பு அமைச்சு மற்றும் பிரான்ஸ் மிசெலின் கூட்டுறவு நிதியுதவியின் கீழ் பெருந்தோட்டத்தறை அமைச்சின் வழிகாட்டலில் பிரான்ஸ் Ksapa கம்பனியால் மொனராகல மாவட்டத்தில் படல்கும்புர மற்றும் மெதகம போன்ற இறப்பர் செய்கைப் பிரதேசங்களிலுள்ள 6,000 சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுவதற்காக 'இறப்பர் உற்பத்தியில் பெறுமதிச் சேர்க்கை அதிகரித்தல் மற்றும் சிறிய இறப்பர் தோட்ட உரிமையாளர்களின் இயலளவை அதிகரிக்கும் கருத்திட்டம்' நடைமுறைப்படுத்துவதற்காக திட்டமிடப்பட்டுள்ளது.

முன்மொழியப்பட்டுள்ள கருத்திட்டம் தேசிய திட்டமிடல் திணைக்களத்தால் பரிந்துரைக்கப்பட்டுள்ளதுடன், கருத்திட்டத்தின் மொத்த செலவு 726,700 யூரோ எனவும் மதிப்பிடப்பட்டுள்ளது. அதற்கமைய, குறித்த கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கான புரிந்துணர்வு ஒப்பந்தத்தை மேற்கொள்வதற்கான யோசனைக்கு மைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 06. ஒழுங்குவிதிகளை விதித்தல்

2002 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க நலன்புரி அனுகூலங்கள் சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் நலன்புரி கொடுப்பனவு (கொடுப்பனவுகளைப் பெறுவதற்கு தகவுடையவர்களாகவுள்ள ஆட்களைத் தெரிவு செய்தல்) ஒழுங்குவிதிகள் 2022 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20 ஆம் திகதிய அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மூலம் வெளியிடப்பட்டுள்ளது. குறித்த ஒழுங்குவிதிகளின் பாராளுமன்ற அங்கீகாரத்திற்காக சமர்ப்பிப்பதற்காக சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

### 07. பயிற்சி நிகழ்ச்சித்திட்டத்தை நடாத்துதல்

உலக காலநிலை மாற்றங்கள் தொடர்பான ஆய்வுகளுக்கான வலையமைப்பு என்பது உலக காலநிலை மாற்றங்கள் மற்றும் நிலைபெறுதகு இலக்குகளுக்கான சவால்களுக்கு வெற்றிகரமாக முகங்கொடுப்பதற்கு இயலுமாகும் வகையில் ஆசிய பசுபிக் வலயத்தில் செயற்படுகின்ற 22 நாடுகள் அங்கத்துவம் வகிக்கின்ற அரசுகளுக்கிடைய வலையமைப்பாகும். குறித்த வலையமைப்பின் முக்கிய நோக்கமாக அமைவது, ஆசிய பசுபிக் வலயத்தில் உலக நிலைபெறுதகு இலக்குகளுக்காக மேற்கொள்ள வேண்டிய பிராந்திய ரீதியான இயலளவு விருத்தியை ஏற்படுத்துவதாகும்.

உலக காலநிலை மாற்றம் தொடர்பான ஆய்வுகளுக்கான ஆசிய பசுபிக் வலையமைப்பு உபவலயக் குழுக் கூட்டம் மற்றும் தெற்காசிய கருத்திட்ட முன்மொழிவு அபிவிருத்திப் பயிற்சி நிகழ்ச்சியை 2022.11.29 தொடக்கம் 2022.12.01 வரை கொழும்பில் நடாத்துவதற்காக இலங்கை அரசால் உபசரிப்புக்களை மேற்கொள்வதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள படிமுறைகள் தொடர்பாக சமர்ப்பித்த யோசனைக்கு அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது.

---

கிருஷ்ணகிரி

# இளைஞரின் உயிரை பறித்த பிரியாணி

கிருஷ்ணகிரி மாவட்டத்தில் நண்பர்களுடன் பிரியாணி உட்கொண்ட இளைஞனர் ஒருவர் உயிரிழந்த சம்பவம் அதிர்சியை ஏற்படுத்தியுள்ளது.

லக்கம்பட்டி பகுதியை சேர்ந்தவர் அருண்குமார். 24 வயதான அவர் அண்மையில் தனது நண்பர்களுடன் சேர்ந்து தனது அறையில் வைத்து பிரியாணி உட்கொண்டுள்ளார்.

இதன் போது அவருக்கு திடீரென வாந்தி ஏற்பட்டுள்ளது. அத்துடன் மூச்சு திணறல் மற்றும் நெஞ்சு வலியும் ஏற்பட்டுள்ளது.

இதனையடுத்து உடனடியாக அம்புலன்ஸ் சேவையை வரவழைத்த அவரது நண்பர்கள், அவரை மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றுள்ளனர்.

மருத்துவமனையில் அவரை பரிசோதித்த மருத்தவர்கள் ஏற்கனவே



இறந்துவிட்டார் எனத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் பிரியாணி உட்கொண்டதுமே அருண் வாந்தி எடுத்ததால், உணவு நஞ்சடைந்திருக்கலாம் என்ற கோணத்திலும் பொலிஸார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# அதானிக்கு எதிராக வெடித்த போராட்டம்;

## 80 க்கும் மேற்பட்டோர் காயம்

அதானி குழுமத்திற்கு எதிராக அண்மைக்காலமாக பல போராட்டங்கள் சமூக ஆர்வலர்களால் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

குறிப்பாக ஆசியாவின் மிகப்பெரிய பணக்காரரான அதானி மேற்கொண்டுள்ள கட்டுமானப் பணிகளுக்கு எதிராக பல போராட்டங்கள் இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் கேரளாவில் உள்ள அதானிக்குச் சொந்தமான 900 மில்லியன் டொலர்கள் மதிப்புள்ள துறைமுகத்தின் கட்டுமானப் பணிகளுக்கு எதிராக அண்மையில் போராட்டமொன்று அப்பகுதி மீனவர்களால் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

இதன்போது குறித்த கட்டுமானப் பணியில் ஈடுபட்டிருந்த தொழிலாளர்களைப் போராட்டக்காரர்கள் அவர்களது பணிகளைச் செய்ய விடாமல் தடுத்து நிறுத்தியுள்ளனர்.

இதன்காரணமாக பொலிஸாருக்கும் போராட்டக் காரர்களுக்கும் இடையே ஏற்பட்ட மோதலில் 80 க்கும் மேற்பட்ட நபர்கள் காயமடைந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும் பொலிஸாரின் வாகனங்களும் போராட்டக் காரர்களால் சேதப்படுத்தப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இந்நிலையில் அனைத்து சட்டங்களுக்கும் இணங்கியே, துறைமுக கட்டுமானம் நடைபெறுவதாக அந்நிறுவனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.



சென்னை

# காதலிக்காக உயிரை மாய்த்த இளைஞர்



சென்னை, முகப்பேர் பகுதியைச் சேர்ந்தவர் மோகன். 19 வயதான இவர் ஒரு தனியார் கல்லூரியில் பி.காம் முதலாம் ஆண்டு படித்து வந்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு வீட்டில் பெற்றோர்கள் இல்லாத நேரத்தில் மோகன் தனது உயிரை மாய்த்துக்கொண்டுள்ளார். வீடு திரும்பிய பெற்றோர் மகன் உயிரிழந்து கிடப்பதைப் பார்த்து அதிர்ச்சி அடைந்து கதறி அழுதுள்ளனர்.

பின்னர் இது குறித்து பொலிஸாருக்குத் தெரியப்படுத்தியுள்ளனர். இந்நிலையில் இது தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணையில் பல திடுக்கிடும் தகவல்கள் வெளிவந்துள்ளன.

மேகனின் தொலைபேசியினை பொலிஸார் ஆய்வு செய்த போது, அவர் தற்கொலை செய்வதற்கு முன்பாக பெண் ஒருவரிடம் பேசியுள்ளமை தெரியவந்துள்ளது.

இந்நிலையில் அப்பெண்ணைத் தொடர்பு கொண்ட போது , தான் தனியார் மருத்துவமனையொன்றில் செவிலிவராக பணிபுரிந்து வருவதாகவும் கடந்த ஒன்றரை வருடங்களாக இருவரும் காதலித்து வந்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

மேலும் தமக்கிடையில் அடிக்கடி சண்டைகள் ஏற்படுவதாகவும், இதன்போது ஒருவருக்கு ஒருவர், மாறி மாறி தற்கொலை செய்து கொள்ளப்போவதாக விளையாட்டாக மிரட்டி கொள்வதாகவும் அதேபோல் தான், இன்றும் இருவருக்கும் சண்டை ஏற்பட்டதாகவும் ஒருகட்டத்தில்,எப்போதும் போல் தான் தற்கொலை செய்து போவதாக மோகன் கூறிவிட்டு இணைப்பைத் துண்டித்துள்ளார் எனவும் " தெரிவித்துள்ளார்.

எனினும் அவர் விளையாட்டாகவே இவ்வாறு கூறுகின்றார் என நினைத்தே இதைனைத் தான் கண்டுகொள்ளவில்லை என அப்பெண் கதறி அழுதவாறு தெரிவித்துள்ளார்.

வேலூர்

# நாய்குட்டிக்குத் தாயாக மாறிய குரங்கு



வேலூர் மாவட்டம், காட்பாடி பகுதியில் குரங்கு ஒன்று ஆதரவற்ற நாய்குட்டியை வளர்த்து வருகின்றமை ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது.

இக்குரங்கிற்கு பிறந்த குட்டிகள் உயிரிழந்துள்ள நிலையில், வீதிகளில் ஆதரவற்று சுற்றித் திரிந்த குறித்த நாய் குட்டியை அக்குரங்கு தனது குட்டியாகவே நினைத்து பாலூட்டி வளர்த்து வருவதாக அப்பகுதிமக்கள் தெரிவித்துள்ளனர்.

மேலும் அந்நாய்க்குட்டியை தனது வயிற்றில் வைத்துக்கொண்டே யாரும் அதை நெருங்காதவாறு பாதுகாத்து வருவதாகவும். அதேபோல் அந்நாய்க் குட்டியும் குரங்கிடம் மிகுந்த பாசத்தோடு பழகிவருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இனம் வேறு என்றாலும் தாய்மை ஒன்று என்பதை உணர்த்தும் இக்குரங்கின் செயலானது பார்ப்போரை நெகிழ்ச்சியடைய வைத்துள்ளது.

சேலம்

# திருடிய நகைகளை வாசலில் வீசி சென்ற மர்மநபர்கள்



சேலம் தாதகாப்பட்டியைச் பகுதியைச் சேர்ந்தவர் 45 வயதான சசிகுமார் . வைத்தியரான இவர் அப்பகுதியில் சர்ஜிகல் கிளினிக் ஒன்றை நடத்தி வருகிறார்.

இந்நிலையில் அண்மையில் இவரது வீட்டு அலுமாரியில் வைத்திருந்த 15 பவுன் தங்க நகைகள், மற்றும் 1.40 லட்சம் ரூபாய் பணம் திருடுபோயுள்ளன.

இதனையடுத்து இது குறித்து அவர் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்துள்ளார்.

இந்நிலையில் நேற்று முன்தினம் அதிகாலையில் சசிகுமார் வீட்டின் கதவை திறக்க வெளியே வந்து பார்த்த போது, அங்கே ஒரு மஞ்சள் பை கிடந்துள்ளதோடு அதற்குள் திருட்டு போன நகைகள் அனைத்தும் இருந்துள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கண்டு இன்ப அதிர்ச்சி அடைந்த அவர் இது குறித்து பொலிஸாரிடம் தெரிவித்துள்ளார்.

இந்நிலையில் நகைகளை வீட்டின் முன்பு வீசி சென்ற மர்ம நபர்கள் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

ஒடிசா

# வழக்கை ஒத்திவைத்த நீதிபதி

ஒடிசாவில் நீதிமன்றத்தில் வைத்து நீதிபதியிடம் குற்றவாளியொருவர் கத்தியைக் காட்டி மிரட்டிய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

ஒடிசா மாநிலத்தின் கஞ்சம் மாவட்டதில் பெர்ஹாம்பூர் பகுதியில் அமைந்துள்ள நீதிமன்றத்திலேயே நேற்று முன்தினம் இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

சம்பவ தினத்தன்று காலை நீதிபதி பிரக்யான் பரமிதா பிரதிஹாரி என்பவர் நீதிமன்ற பணிகளில் ஈடுபட்டுக்கொண்டிருந்தார்.

அப்போது அங்குவந்த பாகாபன் சாஹூ (50) என்பவரின் வழக்கு விசாரணையை பிற்பகல் ஒத்தி வைப்பதாக நீதிபதி தெரிவித்துள்ளார்.

இதனால் ஆத்திரமடைந்த அவர் நீதிமன்ற விசாரணை அரங்கில் நின்றுக்கொண்டிருந்த வேளை திடீரென கத்தியை எடுத்து நீதிபதியை கொன்றுவிடுவதாக மிரட்டியுள்ளார்.

இதைக்கண்ட அங்கிருந்த மற்ற வழக்கறிஞர்கள், சாஹூவிடம் சாமர்த்தியமாக போராடி கத்தியை பிடிங்கி, நீதிபதியை மீட்டனர்.

இதையடுத்து, குற்றவாளி சாஹூ அங்கிருந்த பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டார்.

கைதானா சாஹூ மீது கொலை முயற்சி உள்பட நான்கு குற்ற வழக்குகள் உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இருப்பினும், இந்த மிரட்டலுக்கான காரணம் குறித்து விரிவான தகவல்கள் ஏதும் தெரிவிக்கப்படவில்லை. தொடர் விசாரணை நடந்தப்பட்டு வருகிறது.

இச்சம்பவம் அப்பகுதியில் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

சீனா

# அரசாங்கத்துக்கு கடும் எதிர்ப்பு

சீனாவில் அண்மைக்காலமாகக் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்படுபவர்களின் எண்ணிக்கை வெகுவாக அதிகரித்து வருகின்றது.

இதன் காரணமாக அந்நாட்டில் உள்ள பல மாகாணங்களில் கடுமையான ஊரடங்கு நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது,

குறிப்பாக அந்நாட்டின் ஜிங்ஜங்க் மாகாணத்தில் நூறு நாட்களுக்கும் மேலாக கடுமையான கட்டுப்பாடுகளுடன் கூடிய ஊரடங்கு நடைமுறையில் இருந்து வருவதாகத்



தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கிடையில் உரும்யூ நகரத்தில் கடந்த 24 ஆம் திகதி அன்று பயங்கர தீ விபத்தொன்று ஏற்பட்டுள்ளது.

ஊரடங்கு காரணமாக அடுக்குமாடி குடியிருப்பில் இருக்கும் குடியிருப்புகளை அதிகாரிகள் சீல் வைத்ததால் தீ விபத்தின் போது அக் குடியிருப்புகளிலிருந்து மக்களால் வெளியேற முடியாமல் தவித்தனர்.

இதனால் தீயில் கருகி 10 பேர் உயிரிழந்துள்ளனர் எனவும் குற்றச்சாட்டுகள் எழுந்தன.

இந்நிலையில் அரசாங்கம் நடைமுறைப்படுத்தியிருக்கும் கொரோனா கட்டுப்பாடுகளை எதிர்த்து மக்கள் பாரிய போராட்டமொன்றை முன்னெடுத்து வருகின்றனர்.

போராட்டத்தில் ஈடுபட்டு வருபவர்களை பொலிஸார் கைது செய்துவருகின்ற போதும் நாளுக்கு நாள் மக்களின் போராட்டமானது தீவிரமடைந்து வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



ரஷ்யா

## பசுக்களுக்கு அழகிப் போட்டி



ரஷ்யாவில் 'யாகுடியா' என்ற இடத்தில் அண்மையில் பசுக்களுக்கான அழகிப் போட்டியொன்று நடைபெற்றுள்ளது.

மொத்தமாக 25 பசுக்கள் கலந்துகொண்ட இப் போட்டியில் 'மிச்சியே' என்ற பசு பட்டத்தை தட்டிச்சென்றுள்ளது.

இதனையடுத்து குறித்த பசுவுக்கு கு 40 லீற்றர் பால் கேன் பரிசாக வழங்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜப்பான்

## வீழ்ச்சியை நோக்கி ஜப்பான்

ஜப்பானில் குழந்தைகள் பிறப்பு விகிதமானது கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டு வெகுவாக குறைந்துள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.




குறிப்பாக இவ் ஆண்டு ஜனவரி மாதத்தில் இருந்து செப்டம்பர் மாதம் வரை 5,99,636 குழந்தைகள் பிறந்ததாகவும், இது கடந்த ஆண்டை காட்டிலும் 4.9 சதவீதம் குறைவாக உள்ளதாகவும் அந்த நாட்டின் சுகாதார அமைச்சின் புள்ளிவிவரங்கள் கூறுகின்றன.

பிறப்புகளை ஊக்குவிக்க கர்ப்பம், பிரசவம் மற்றும் குழந்தை பராமரிப்புக்கான மானியங்களை உயர்த்துவது உட்பட பல்வேறு விரிவான நடவடிக்கைகளை அரசு எடுத்து வருகிறபோதும், பிறப்பு விகிதம் தொடர்ந்து வீழ்ச்சி அடைந்து வருவதாக அதிகாரிகள் கவலை தெரிவித்துள்ளனர்.

**“ பிரதமர் புமியோ கிஷிடாவிடம் அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது**

குறைந்த பிறப்பு விகிதம் மற்றும் மக்கள்தொகை வீழ்ச்சி ஆகியவை ஜப்பானின் தேசிய வலிமையை சிதைக்கும் காரணிகளாக இருப்பதாக கூறி அரசாங்கத்தால் நியமிக்கப்பட்ட குழு கடந்த வாரம் பிரதமர் புமியோ கிஷிடாவிடம் அறிக்கையொன்றை சமர்ப்பித்திருந்தமை குறிப்பிடத்தக்கது.

## குரங்கு அம்மைக்கு புதிய பெயர்




உலக நாடுகள் பலவற்றில் குரங்கம்மைத் தொற்றானது தீவிரமாகப் பரவி வருகின்றது.

இந்நிலையில் குரங்கு அம்மை நோய்த்தொற்றுக்கு 'mpox 'என உலக சுகாதார ஸ்தாபனம் புதிய பெயரிட்டுள்ளது.

ஆரம்பத்தில் குரங்குகள் இடையே பரவி வந்த இந்நோயானது தற்போது மனிதர்களிடையே, தீவிரமாகப் பரவி வரும் நிலையில் குரங்கு அம்மை என்ற பெயர் கறுப்பினத்தவர்களை இழிவுபடுத்தக் கூடும் என்பதால் இப் புதிய பெயர் வைக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனையடுத்து குரங்கு அம்மை என்ற பெயரின் பயன்பாடு படிப்படியாகக் குறைக்கப்படும் என்று உலக சுகாதார ஸ்தாபனம் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

பிரித்தானியா



## இனிமேல் வாரத்தில் 4 நாட்களே வேலை

உலகில் பல நிறுவனங்கள் வாரத்தில் 4 நாட்கள் வேலை என்ற கொள்கைக்கு மாறிவருகின்றன.

அந்த வகையில் பிரித்தானியாவில் உள்ள 100 நிறுவனங்கள் தங்கள் அலுவலக பணி நாட்களை 4 நாட்களாக மாற்றியுள்ளன.

அதேசமயம் பணியைத் தவிர்த்து மற்ற நாட்களில் பணி நேரம் நீட்டிக்கப்படாது எனவும் சம்பளம் குறைப்பு நடவடிக்கையும் கிடையாது எனவும் அந்நிறுவனங்கள் அறிவித்துள்ளன.

இவ் அறிவிப்பானது ஊழியர்கள் மத்தியில் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


மேலும் பணி நேர குறைப்பால் இந்த 100 நிறுவனங்களில் பணியாற்றும் 2 ,600 பணியாளர்கள் பயனடைவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

தாய்லாந்து

## குரங்குகளுக்கு விருந்து

தாய்லாந்தின் தலைநகரான பாங்காக்கில் உள்ள லோப்பூரி என்ற இடத்தில் ஒவ்வொரு வருடமும் 'குரங்குகள் திருவிழா' ( Monkey Feast Festival ) கொண்டாடப்படு வருகின்றது.

தாய்லாந்து மக்கள், குரங்குகளைக் கடவுளின் அம்சமாகப் பார்ப்பதனால், அவைகளுக்கு அங்கு சிறப்பு மரியாதை கொடுக்கும் வகையிலும், நகரத்தில் வாழும் குரங்குகளை அங்கீகரிக்கும் வகையிலும் கடந்த 1989ஆம் ஆண்டில் இருந்து இத் திருவிழாவைக்



கொண்டாடி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்தவகையில் இத்திருவிழாவின் போது ஆயிரக்கணக்கான குரங்குகள் குறித்த பகுதிக்கு படையெடுப்பதாகவும், அங்கு மக்கள், குரங்குகளுக்காக தயாரித்து வைத்திருக்கும் உணவுகளை உண்டுவிட்டுச் செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதே சமயம் அப் பகுதியில் சுற்றாலா துறையை மேம்படுத்தும் முயற்சியாகவும் இவ்வழக்கம் பின்பற்றப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது.



உலகக் கிண்ணம்:

# உருகுவேயை வென்ற போர்த்துக்கல்

### சுவிற்ஸர்லாந்தை வென்ற பிரேஸில்

கட்டாரில் நடைபெற்று வரும் கால்பந்தாட்ட உலகக் கிண்ணத் தொடரில், நேற்று அதிகாலை நடைபெற்ற உருகுவே உடனான குழு எச் போட்டியில் 2-0 என்ற கோல் கணக்கில் வென்ற போர்த்துக்கல், இறுதி 16 அணிகளுக்கான சுற்றுக்குத் தகுதி பெற்றுள்ளது.

போர்த்துக்கல் சார்பாகப் பெறப்பட்ட இரண்டு கோல்களையும் புரூனோ பெர்ணாண்டஸ் பெற்றிருந்தார்.

இதேவேளை, நேற்று முன்தினமிரவு நடைபெற்ற சுவிற்ஸர்லாந்துடனான குழு ஜி போட்டியில் கஸேமீரோ பெற்ற கோலுடன் 1-0 என்ற கோல் கணக்கில் பிரேஸில் வென்று இறுதி 16 அணிகளுக்கான சுற்றுக்குத் தகுதி பெற்றது.

இந்நிலையில், நேற்று முன்தினம் மாலை நடைபெற்ற தென் கொரியாவுடனான குழு எச் போட்டியில் 3-2 என்ற கோல் கணக்கில் கானா வென்றதுடன், கமரூன் மற்றும் சேர்பியாவிக்கிடையேயான குழு ஜி போட்டியானது 3-3 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்தது.

இதேவேளை, இன்றிரவு 8.30 மணிக்கு நடைபெறவுள்ள ஒரு குழு டி போட்டியில் துனீஷியாவை நடப்புச் சம்பியன்களான பிரான்ஸ் எதிர்கொள்ளவுள்ளதுடன், மற்றைய குழு டி போட்டியில் அவுஸ்திரேலியாவும் டென்மார்க்கும் மோதவுள்ளன.

இது தவிர, நாளை அதிகாலை 12.30 மணிக்கு நடைபெறவுள்ள ஒரு குழு சி போட்டியில் போலந்தும், ஆர்ஜென்டீனாவும் மோதவுள்ளதுடன், மற்றைய குழு சி போட்டியில் சவுதி அரேபியாவும், மெக்ஸிக்கோவும் மோதவுள்ளன.



நியூசிலாந்து எதிர் இந்தியா:

## தொடரைச் சமப்படுத்துமா இந்தியா?

நியூசிலாந்து, இந்திய அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரில், கிறைஸ்ட்சேர்ச்சில் இன்று காலை 7 மணிக்கு நடைபெறவுள்ள மூன்றாவது போட்டியில் இந்தியா வெற்றி பெற்றாலே தொடரைச் சமப்படுத்த முடியும் என்ற நிலையில் இப்போட்டி நடைபெறுகிறது.

இத்தொடர் முழுவதும் போல மழையால் பாதிக்கப்பட்டது போல இப்போட்டியும் மழையால் பாதிக்கப்படக்கூடிய சந்தர்ப்பங்கள் காணப்படுவதுடன், குறைந்த ஓவர்கள் கொண்ட போட்டியாகவே நடைபெறக்கூடிய சந்தர்ப்பம் காணப்படுகின்றது.

தொடர்ந்து சொதப்பி வருகின்ற றிஷப் பண்ட்டுக்கு வாய்ப்பு வழங்கப்படுவதோடு, சஞ்சு சாம்ஸனுக்கு வாய்ப்பு வழங்கப்படுகின்றமையானது இணையவெளியில் பேசுபொருளாகக் காணப்படுகின்ற நிலையில் அணியில் இடம்பெறும் வீரர்கள் நிச்சயமாக அதிகம் இப்போட்டியில் கவனிக்கப்படுவர்.

## அகில இலங்கை, கிழக்கு மாகாண பூப்பந்தாட்ட சம்பியன்ஷிப்

அஸ்ஹர் இப்றாஹிம்

இலங்கை பூப்பந்தாட்ட சம்மேளனம், கிழக்கு மாகாண பூப்பந்தாட்ட சம்மேளனத்துடன் இணைந்து ஒழுங்கு செய்துள்ள அகில இலங்கை, கிழக்கு மாகாண திறந்த பூப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டிகளுக்காக தேசிய ரீதியில் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது.

அடுத்த மாதம் 13ஆம் திகதி முதல் 18ஆம் திகதி வரை மட்டக்களப்பில் இடம்பெறவுள்ள மேற்படி சம்பியன்ஷிப் போட்டியில் 13, 15, 17, 19 வயதுக்குட்பட்ட ஆண், பெண் இரு பாலாருக்குமான தனிநபர், இரட்டையர், கனிஷ்ட பிரிவுக்குட்பட்ட இருபாலாருக்குமான கலப்பு இரட்டையர், 30 வயதுக்கு மேற்பட்ட, 70

**“ அகில இலங்கை, கிழக்கு மாகாண திறந்த பூப்பந்தாட்ட சம்பியன்ஷிப் போட்டிகளுக்காக தேசிய ரீதியில் விண்ணப்பம் கோரப்பட்டுள்ளது**

**“ தொடரின் பணிப்பாளர் அலியார் பைஸரை 0776078706 தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது**

வயதுக்கு மேற்பட்ட இரு பாலாருக்குமான கலப்பு இரட்டையர் பிரிவுகளில் போட்டிகள் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

அரையிறுதிப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு பணப்பரிசும் சான்றிதழ்களும், தேசிய மட்டத்தில் சம்பியன்களாகவும், இரண்டாம் இடத்துக்கு தெரிவு செய்யப்படுபவர்களுக்கு பணப்பரிசு, சான்றிதழ், கிண்ணம், பதக்கங்களும் வழங்கப்படவுள்ளன.

விண்ணப்ப முடிவு திகதி நாளை மறுதினம் என அறிவிக்கப்பட்டுள்ளதுடன் மேலதிக விபரங்களுக்கு தொடரின் பணிப்பாளர் அலியார் பைஸரை 0776078706 தொடர்பு கொள்ளுமாறும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இலங்கை எதிர் ஆப்கானிஸ்தான்:

## மூன்றாவது போட்டி இன்று

இலங்கை, ஆப்கானிஸ்தான் அணிகளுக்கிடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் சர்வதேசப் போட்டித் தொடரின் மூன்றாவது போட்டியானது பல்லேகலவில் இன்று பிற்பகல் 2.30 மணிக்கு ஆரம்பிக்கவுள்ளது.

இத்தொடரின் முதலாவது போட்டியில் ஆப்கானிஸ்தான் வென்றதோடு, இரண்டாவது போட்டியில் முடிவேதும் பெறப்படாத நிலையில் இப்போட்டியில் வென்றாலே இலங்கை தொடரைச் சமப்படுத்த முடியும்.

தவிர, அடுத்தாண்டு நடைபெறவுள்ள உலகக் கிண்ணத்துக்கு நேரடியாகத் தகுதி பெறுவதற்கு இப்போட்டியோடு, நியூசிலாந்தில் நடைபெறவுள்ள மூன்று போட்டிகளையும் இலங்கை வெல்ல வேண்டிய கட்டாயத்திலுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் புதன்கிழமை 30 நவம்பர் 2022, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.